தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**04.07.2013**

**வெங்காயத்தை தாக்கும் அடித்தாள் அழுகல் நோய்!**



வெங்காயத்தைத் தாக்கும் அடித்தாள் அழுகல் நோயைக் கட்டுப்படுத்துவது குறித்து அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலைய பயிர் நோயியல் துறை உதவி பேராசிரியை ந. ரஜினிமாலா வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வெங்காயமானது அல்லியேசியே என்ற குடும்பத்தைச் சார்ந்தது. உணவில் அதிகளவில் இது பயன்படுத்தப்படுகிறது. மேலும் அதிக மருத்துவக் குணங்களையும் கொண்டுள்ளது. இத்தகைய வெங்காயத்தை அடித்தாள் அழுகல் நோய் தாக்குகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் முக்கூடல், இடைகால், பாவூர்சத்திரம் மற்றும் அம்பாசமுத்திரம் வட்டாரப் பகுதிகளில் வெங்காயமானது பயிரிடப்பட்டு உள்ளது. அவற்றில் அடித்தாள் அழுகல் நோய் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது.

அடித்தாள் அழுகல் நோயை பூஞ்சாண கிருமியானது பரப்புகிறது. இந்நோய் தாக்கப்பட்ட இலைகள் மஞ்சள் நிறமாக மாறி பின் மெதுவாகக் காய ஆரம்பிக்கும்.

தாக்கப்பட்ட செடிகளின் இலைகள் நுனியிலிருந்து கீழ்நோக்கி காயும். செடியின் இலைப்பரப்பு முழுவதும் வாடும். வெங்காய குமிழ் மென்மையாகி அழுகும். அத்துடன் வேர்கள் அழுகும். வெள்ளை நிற பூஞ்சாண வளர்ச்சி இதன்மேல் தோன்றும். இந்த நோய் வயல் மற்றும் சேமிப்புக் கிடங்கிலும் காணப்படும்.

நோய் கட்டுப்பாடு: இந்நோயைக் கட்டுப்படுத்த பயிர் சுழற்சி முறையை மேற்கொள்ள வேண்டும். அறுவடை செய்த வெங்காய குமிழ்களைச் சுத்தமாக சேமிக்க வேண்டும். மண்ணில் தாமிர அளவு குறையும்போது வெங்காயம் இந்நோயால் தாக்கப்படும். இதனால் தாமிரத்தை கூடுதலாக நிலத்தில் சேர்க்க வேண்டும். தாமிர ஆக்ஸிகுளோரைடை 0.25 சதவிகிதம் மண்ணில் இட வேண்டும்.

டிரைக்கோடெர்மா என்ற பூஞ்சாணத்தை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் கலந்து உடனே விதைக்கலாம் என்றார் அவர்.

அடித்தாள் அழுகல் நோயால் பாதிக்கப்பட்டுள்ள வெங்காயச் செடிகள்.

**கூடுதல் லாபம் தரும் பயறு விதை உற்பத்தி**



சேலம் மாவட்டத்தில் பெய்து வரும் மழையைப் பயன்படுத்தி பாசிப் பயறு, தட்டைப் பயறு விதை உற்பத்தி செய்து கூடுதல் லாபம் பெறலாம் என்று விதைச் சான்று உதவி இயக்குநர் வே.ராஜதுரை, விவசாயிகளை கேட்டுக் கொண்டார்.

சேலம் மாவட்டத்தில் இந்த பருவத்தில் நல்ல மழை பெய்து வருகிறது. விவசாயிகள் இதைப் பயன்படுத்திக் கொண்டு பயறு வகைப் பயிர்களான உளுந்து, பாசிப்

பயறு, தட்டைப் பயறுகளில் விதைப் பண்ணை பதிவு செய்து, அதிக மகசூலையும் அதன் மூலம் லாபமும் பெறத் திட்டமிடலாம்.

குறிப்பாக, பாசிப் பயறில் அறிவிக்கப்பட்ட ரகங்களான கே.எம்-2, வம்பன்-2, கோ-6 ரகங்களை சாகுபடி செய்யலாம். சான்று விதை உற்பத்தி செய்ய முதலில் விதைப் பண்ணை பதிவு செய்ய வேண்டும். உரிய படிவத்தில் மூன்று நகல்களில் விதைப்பு அறிக்கையை நிறைவு செய்து விதைப் பண்ணைக் கட்டணமாக ஓர் ஏக்கருக்கு வயலாய்வுக் கட்டணம் ரூ.50, பதிவுக் கட்டணம் ரூ.25, விதைப் பரிசோதனைக் கட்டணம் ரூ.30-ஐ செலுத்தி விதைச்சான்று உதவி இயக்குநர், சேலம் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும்.

பயறு வகை விதைப் பண்ணை பதிவு, விதைப்பு செய்த நாளில் இருந்து 30 முதல் 35 நாள்களுக்குள் அல்லது பூப்பதற்கு 15 நாள்களுக்கு முன்னதாக விதைப் பண்ணை பதிவு செய்ய வேண்டும். விதைப் பண்ணை பதிவு விண்ணப்பத்தோடு மூல விதைக்கான சான்றட்டைகள், விதை வாங்கியதற்கான ரசீது ஆகியவை விதை ஆதாரத்திற்காக இணைக்கப்பட வேண்டும்.

பயறு வகை விதைப் பண்ணை பூப்பருவத்தின் போது ஒரு முறையும், காய்முதிர்வு நிலையில் ஒரு முறையும், விதைச்சான்று அலுவலரால் வயலாய்வு மேற்கொள்ளப்பட்டு பயிர் விலகுதூரம், கலவன் கணக்கீடு போன்ற காரணிகள் கணக்கிடப்பட்டு அறிக்கை வழங்கப்படும்.

விவசாயிகள் பயிர் விலகு தூரம் ஆதார நிலைக்கு 10 மீட்டரும், சான்று நிலைக்கு 5 மீட்டருக்கு குறையாமல் இருக்குமாறு விதைப் பண்ணை அமைக்க வேண்டும். மேலும், விதைச்சான்று அலுவலரால் சுட்டிக்காட்டப்பட்ட குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு, விதைப் பண்ணை பராமரிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு பராமரிக்கப்பட்ட விதைப் பண்ணை வயலில் அறுவடை முடிந்த உடன் சுத்தி அறிக்கை பெற வேண்டும். அறுவடை ஆய்விலிருந்து 90 நாள்களுக்குள் அறுவடை செய்யப்பட்ட விதையை, விதைச் சுத்தி நிலையத்துக்கு கொண்டு வந்து

சான்று பணியைத் தொடரலாம் என விதைச்சான்று உதவி இயக்குநர் வே.ராஜதுரை தெரிவித்தார்.

**திருந்திய நெல் சாகுபடியில் அதிக மகசூல்**



திருந்திய நெல் சாகுபடி மூலம் அதிக மகசூல் பெறலாம் என கோபி வேளாண் உதவி இயக்குநர் அ.நே.ஆசைத்தம்பி தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டத்தில் தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசனப் பகுதிகளுக்கு நெல் சாகுபடிக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. திருந்திய நெல் சாகுபடி என்ற ஒற்றை நாற்று நடவு முறை, நெல் பயிரிடுதலில் கண்டுபிடிக்கப்பட்ட நவீன முறையாகும். இம் முறை குறித்து கோபி வேளாண் உதவி இயக்குநர் அ.நே.ஆசைத்தம்பி தெரிவித்துள்ளது:

ஈரோடு மாவட்டம், கோபி வட்டாரத்தில் அதிக அளவில் திருந்திய நெல் சாகுபடி முறையில் விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். இந்த முறையில் இளம் நாற்று நடுவதால் நன்கு வளர்கிறது. வேர்களின் வளர்ச்சி அதிகமாகி, அதிக தூர்கள் வெடிக்கின்றன.

அறுவடை வரை இலைகள் பசுமையாக இருப்பதால் சூரிய ஒளிச்சேர்க்கை கடைசி வரை நன்றாக இருக்கிறது. ஏற்கெனவே கிடைத்த மகசூலைவிட இந்த முறை மூலமாக கூடுதல் மகசூல் கிடைக்கிறது. மிகவும் எளிமையான, சிக்கனமான இந்த

தொழில்நுட்பத்தால் ஏக்கருக்கு குறைந்தது 500 கிலோ கூடுதல் மகசூல் கிடைக்கிறது.

விதையளவு: திருந்திய நெல் சாகுபடிக்கு குறைந்த அளவு நெல் விதைகள் போதுமானது. ஒரு ஏக்கருக்கு 2 முதல் 3 கிலோ விதை தேவைப்படுகிறது.

நாற்றங்கால் அமைத்தல்: நீர் நிலைக்கும் நடவு வயலுக்கும் அருகில் நாற்றங்கால் இருப்பது நல்லது. ஒரு ஏக்கர் பரப்பளவில் நாற்றுகள் நடவு செய்ய ஒரு சென்ட் பரப்பளவு நிலம் போதுமானதாகும். உழுது சமன்படுத்தப்பட்ட நிலம் 4 அடி அகல பாத்திகளாக ஒன்றரை அடி இடைவெளியில் அமைக்க வேண்டும்.

வயல்களில் களி மண் விகிதம் அதிக அளவில் இருந்தால் மணல் கலக்கலாம். 20 சதவீத நன்கு மக்கிய தொழு உரத்தை 10 சதவீத தவிடு, ஒன்றரை கிலோ பொடியாக்கப்பட்ட டைஅமோனியம் பாஸ்பேட் அல்லது 2 கிலோ 17:17:17 காம்ப்ளக்ஸ் உரத்துடன் கலந்து நாற்றங்கால் அமைக்கும் இடத்தின் மீது பரப்பி நாற்று பாத்திகளை அமைக்க வேண்டும்.

நாற்றங்காலைப் பாதுகாத்தல்: விதையை ஒருநாள் முழுவதும் ஊற வைத்து பின்பு வடிக்கட்டி, ஒருநாள் நிழலில் முளைகட்ட வைத்த பிறகு, அந்த விதையை சீராகத் தூவி விடவேண்டும். நெல் விதை மீது சீராக மணல் அல்லது தொழு உரத்துடன் கலந்த மண்ணைத் தூவிய பிறகு தண்ணீர் தெளிக்க வேண்டும்.

அதிக வெயிலில் இருந்து நாற்றைப் பாதுகாக்க நாற்றங்காலை வைக்கோல் மூலமாக மூடி வைப்பது நல்லது.

இவ்வாறு நாற்றங்காலில் வளர்க்கும்போது 14 முதல் 15 நாள்களில் நடவு செய்வதற்கு ஏற்ற வகையில் நாற்றுகள் வளர்ந்து நிற்கும்.

நடவு வயல்: ஒரேயொரு நாற்றை எடுத்து மண்ணின் மேற்பரப்பில் மேலாக நடவு செய்ய வேண்டும். 10 அங்குலத்திற்கு 10 அங்குலம் நடவு செய்ய வேண்டும்.

அவ்வாறு நடவு செய்ய ஒரு கயிற்றில் ஒவ்வொரு 10 அங்குலத்திற்கும் அடையாளம் வைத்து நடவு செய்யலாம் அல்லது சமன் செய்யப்பட்ட வயலில் 10 அங்குலத்திற்கு குறுக்காகவும் நெடுக்காகவும் மார்க்கர் கருவியால் கோடுகள் ஏற்படுத்தி, அக்கோடுகள் சந்திக்கும் இடங்களில் நடவு செய்து சரியான வரிசையை ஏற்படுத்தலாம்.

நாற்றுகள், பாத்திகளிலிருந்து பறித்த 30 நிமிஷங்களில் நடவு செய்ய வேண்டும். அசோஸ்பைரில்லம் மற்றும் சூடோமோனாஸ் புரெசன்ஸ் கலவையில் 20 நிமிஷம் வேரை நன்கு நனைத்து பின்னர் நடவு செய்ய வேண்டும்.

நீர் மேலாண்மை: மண் மறைய நீர் கட்ட வேண்டும். இதனை 10 நாள்களுக்கு தொடர்ந்து செய்ய வேண்டும். அதன் பின்னரே நீர்ப் பாய்ச்ச வேண்டும். இதையே பயிர் பருவம் வரை பின்பற்ற வேண்டும்.

நடவு செய்த 10, 20, 30, 40 நாள்களில் அதாவது 10 நாள்கள் இடைவெளியில் கோனோவீடர் என்னும் களைக்கருவி உருளை மூலமாக வயலில் முன்னும் பின்னும் உருட்ட வேண்டும். அவ்வாறு செய்வதால் மண்ணில் இளக்கம் ஏற்பட்டு வேர்களில் காற்றோட்டம் அதிகரித்து, அதிக எண்ணிக்கையில் தூர்கள் உருவாகின்றன.

மேலும், தூர்கள் அனைத்திலிருந்தும் ஒரே நேரத்தில் திடமான கதிர்கள் வெளிவருகின்றன. அதனால், பதர்கள் இல்லாத நல்ல எடை உள்ள திரட்சியான நெல் மணிகள் உருவாகி அதிக மகசூல் கிடைக்கிறது.

இந்த முறையில் அதிக காற்றோட்டமும், வெளிச்சமும் பயிர்களுக்கு கிடைப்பதால் எலித் தொல்லை குறைவதுடன், பூச்சி நோய்த் தாக்குதலும் குறைந்து சாகுபடிச் செலவும் கட்டுப்படுகிறது.

மேலும், திருந்திய நெல் சாகுபடி அனைத்துப் பருவங்களுக்கும், இப்போது நடைமுறையில் உள்ள அனைத்து ரகங்களுக்கும் ஏற்றது.

இதுகுறித்த தொழில்நுட்ப விவரங்களுக்கு கோபி மற்றும் தூக்கநாயக்கன்பாளையம் வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகங்களை அணுகலாம்.

**உணவுப் பாதுகாப்பு மசோதாவை அமல்படுத்த அவசரச் சட்டம்**



உணவுப் பாதுகாப்பு மசோதாவை அமல்படுத்த அவசரச் சட்டம் பிறப்பிப்பதற்கு மத்திய அமைச்சரவை புதன்கிழமை ஒப்புதல் அளித்துள்ளது.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் கனவுத் திட்டமாக வர்ணிக்கப்படும் உணவுப் பாதுகாப்பு மசோதா, வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களுக்கு ரூ.1 முதல் 3 விலையில் மாதம் 5 கிலோ உணவுப் பொருள் கிடைப்பதை உறுதி செய்கிறது. இது அமலுக்கு வரும்போது உலகிலேயே மிகப்பெரிய திட்டங்களில் ஒன்றாக அமையும். மத்திய அரசு இதற்காக ரூ.1 லட்சத்து 25 ஆயிரம் கோடி செலவிடும்.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் ஜூலை 26-ம் தேதி தொடங்கவுள்ள நிலையில், அவசரச் சட்டம் கொண்டு வரப்படவுள்ளது. அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்ட பின் மக்களவை, மாநிலங்களவையில் அதற்கு ஒப்புதல் பெற வேண்டும்.

முன்னதாக அவசரச் சட்டத்துக்கு குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி கையெழுத்திட்டு ஒப்புதல் அளிப்பார். அவசரச் சட்டம் வியாழக்கிழமை பிரணாப் முகர்ஜியிடம் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிகிறது. பயனாளிகளின் பட்டியலை

மாநில அரசுகள் முழுமை செய்த பிறகு ஆகஸ்ட் மாதம் முதல் திட்டம் அமலுக்கு வரும். நாடு முழுவதும் இத்திட்டம் அமல்படுத்துவதற்கு சுமார் 6 மாத காலமாகும்.

கடந்த மாதம் கூடிய அமைச்சரவை இந்த விவகாரம் தொடர்பாக எந்த முடிவும் எடுக்காமல் ஒத்திவைத்தது குறிப்பிடத்தக்கது.

பாஜக, இடதுசாரிகள் எதிர்ப்பு: இந்த அவசர சட்டத்துக்கு பாஜக, இடதுசாரிக் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இது தொடர்பாக, மார்க்சிஸ்ட் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத் கூறியது: இது முற்றிலும் தேவையற்ற நடவடிக்கை. இதுபோன்ற முக்கிய மசோதாவை நாடாளுமன்றத்தில் விவாதித்துதான் நிறைவேற்ற வேண்டும். அவசரச் சட்டம் கொண்டு வருவதன் மூலம் நாடாளுமன்றத்தை அவமதிக்கும் வகையில் அரசு நடந்து கொண்டுள்ளது. இப்போதுள்ள சட்ட மசோதாவில் அதிக குறைபாடுகள் உள்ளன. அதில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் தேசிய செயலர் டி.ராஜா கூறுகையில், "இப்போதைய நிலையில் உணவுப் பாதுகாப்பு மசோதாவை ஏற்க முடியாது. நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தி திருத்தங்களைக் கொண்டு வருவது அவசியம். இப்படிக் கூறுவதால் உணவுப் பாதுகாப்பு மசோதாவை நாங்கள் எதிர்க்கிறோம் என்று பொருள் அல்ல. உணவு பெறுவதை மக்களின் அடிப்படை உரிமையாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நாடு முழுவதும் போராட்டங்களை நடத்தியது இடதுசாரிக் கட்சிகள்தான்' என்றார்.

பாஜக செய்தித் தொடர்பாளர் நிர்மலா சீதாராமன் கூறியது: உணவுப் பாதுகாப்பு மசோதாவுக்காக அவசரச் சட்டம் கொண்டு வருவது என்பது தேர்தலை மனதில் வைத்து மத்திய அரசு செய்யும் ஏமாற்று வேலை. இது மிகவும் முக்கியமான மசோதா, இதனை நாடாளுமன்றத்தில் விவாதிக்காமல் நிறைவேற்ற காங்கிரஸ் முடிவு செய்துள்ளது. இதில் உள்ள குறைபாடுகளும், ஏமாற்று வேலைகளும் விவாதத்தில் வெளிப்பட்டு விடும் என்பதுதான் இதற்குக் காரணம். தங்கள் ஆட்சியில் நடந்த ஊழல்களை மறைக்கும் வகையிலும், தேர்தலில் வாக்குகளைப்

பெறுவதற்கும் இந்த மசோதாவை பயன்படுத்த காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது என்றார் அவர்.

**சிவகங்கை வேளாண் விரிவாக்க மையத்தில் நெல், பயறு விதைப் பயிர்களுக்கு களைக் கொல்லி மருந்துகள் தயார்**

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் நெல், பயிறு விதைப் பயிர்களுக்கு உரிய கலைக் கொல்லி மருந்துகள் தயார் நிலையில் உள்ளன.

மாவட்டத்தில் தற்போது பரவலாக மழை பெய்துள்ளது. இதனால் மானாவாரி நிலங்களில் கோடை உழவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் வேளாண் விரிவாக்க மையங்களில் நடப்பு ஆண்டு விதைப்புக்கு 266 மெட்ரிக் டன் விதை நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கிலோ ஒன்றுக்கு ரூ.5 மானியம் வழங்கப்பட உள்ளது.

பயறு வகைப் பயிர்களில் உளுந்து விதைகள் 6.8 மெட்ரிக் டன் இருப்பு உள்ளது. இதற்கு மானியமாக கிலோவுக்கு ரூ.12 வழங்கப்படும். எண்ணெய் வித்துப் பயிர்களில் கடலை விதை 20.5 மெட்ரிக் டன் உள்ளது. நெல், உளுந்து, கடலை விதைகள் விதைக் கிராமத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படும் கிராமங்களுக்கு ரூ.50 மானியத்தில் வழங்கப்பட உள்ளது.

ரசாயன உரங்களான யூரியா 680 மெட்ரிக் டன், டிரபி 210 மெட்ரிக் டன், பொட்டாஷ் 290 மெட்ரிக் டன், 20-20 காம்ப்ளக்ஸ் 259 மெட்ரிக் டன் தனியார் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. நெல் பயறுக்குத் தேவையான கலைக் கொல்லி மருந்து 850 லிட்டர், பயறு விதைப் பயிர்களுக்குத் தேவையான கலைக்கொல்லி மருந்து 225 லிட்டர் தனியார் மற்றும் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இந்த இடுபொருள்கள் தேவைப்படும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட வேளாண் விரிவாக்க மையங்களைத் தொடர்பு கொண்டு தேவைக்கேற்ப பெற்றுக்

கொள்ளலாம் என சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வே. ராஜாராமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**வேளாண் துறை அலுவலர்கள் வெளிமாநில பயணம்**

விருதுநகர் மாவட்ட வேளாண்மை துறையின் நீர்வள நிலவள திட்டத்தின் சார்பில் பாசன மேலாண்மையை அறிந்து கொள்ளும் வகையில் வெளிமாநிலங்களுக்கு அலுவலர்கள் பட்டறிவு பயணமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதுகுறித்து உழவர் பயிற்சி நிலைய மேலாண்மை நிலைய துணை இயக்குநர் செண்பகராஜ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

வேளாண் உற்பத்தி திறனையும் வருமானத்தையும் அதிகப்படுத்தும் முயற்சியாக பாசன மேலாண்மை மற்றும் வேளாண் தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு எளிதாக கிடைக்கும் நோக்கத்தில் நீர்வள நிலவளத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், வேளாண்மையை தீவிரப்படுத்தும் வகையில் மாற்றுப்பயிர் சாகுபடி செய்தல், உபவடி நிலங்களில் பாசன அமைப்புகள் மூலம் பாசன பரப்புகளை அதிகப்படுத்துவதால் மட்டுமே வருவாயை அதிகரிக்க முடியும்.

இத்திட்டங்களை செயல்படுத்தும் வகையில் அலுவலர்களுக்கு வெளிமாநில பட்டறிவு பயணமாக கடந்த வாரம் அழைத்துச் செல்லப்பட்டனர். கேரளம், கோவா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு வேளாண்மை பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் நடந்து வரும் ஆராய்ச்சிகள், விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த பண்ணையம், மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஆகியவற்றைப் பார்வையிட்டனர்.

இப் பயணம் மூலம் வேளாண் அறிவியல் மையங்களின் செயல்பாடுகள் பற்றியும் அறிந்து கொள்ள முடிந்தது. மேலும், அறுவடைக்கு பின் சேதாரங்களை தவிர்ப்பதற்கான நவீன தொழில் நுட்பங்கள் குறித்து வேளாண் விஞ்ஞானிகளால் எடுத்துரைக்கப்பட்டது. இப் பயணத்தில் விருதுநகர் மாவட்டத்தின் வேளாண்மை இணை இயக்குநர், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பயணத்திற்கான ஏற்பாடுகளை விருதுநகர் மாவட்ட உழவர் பயிற்சி நிலைய மேலாண்மை துணை இயக்குநர் மீ.சு.செண்பகராஜ் உள்ளிட்ட துறை அலுவலர்கள் செய்திருந்தனர்.

**மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சி பெற  விவசாயிகளுக்கு அழைப்பு**

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் வீட்டில் காய்கறித் தோட்டம் அமைப்பது தொடர்பான இலவச பயிற்சி பெற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொறுப்பு) ஜெ. கதிரவன் புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில், மண் புழு உரம் தயாரிப்பது தொடர்பான இலவச பயிற்சி ஜூலை 9 ஆம் தேதியும், வீட்டுக் காய்கறி தோட்டம் அமைப்பது தொடர்பான இலவச பயிற்சி 10 ஆம் தேதியும் நடைபெற உள்ளது.

மண் புழு உரம் தயாரிப்பு பயிற்சியில், மண் புழு உரம் தயாரிக்கும் முறைகள், மண் புழுவின் வகைகள், மண்புழு குளியல் நீர் தயாரிக்கும் முறைகள், பண்ணைக் கழிவுகளைப் பயன்படுத்தி மண்புழு உரம் தயாரித்தல், மண்புழு உரத்தை சலித்துப் பிரிக்கும் முறை ஆகியவை குறித்தும், வீட்டுக் காய்கறி தோட்டம் அமைப்பது தொடர்பான பயிற்சியில் தோட்டம் அமைக்கும் முறை, பராமரிப்பு மற்றும் பயன்கள், அதன் முக்கியத்துவம், பருவம் சார்ந்த காய்கறிப் பயிர் தேர்வு ஆகியவை குறித்த பயிற்சிகள் காணொலி காட்சி மற்றும் செயல் விளக்கங்கள் மூலமாக பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும் பயிற்சியில் விவசாயிகள், பண்ணை மகளிர், கிராமப்புற இளைஞர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம். பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் தங்களது பெயர் மற்றும் முகவரியை வேளாண் அறிவியல் மையத்தில் நேரில், அல்லது 04328-293592 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்துகொள்ள வேண்டும் என்றார் அவர்.

**கொடைக்கானலில் மழைநீர் சேமிப்பு விழிப்புணர்வு ஊர்வலம்**

கொடைக்கானல் நகராட்சி சார்பில், மழைநீர் சேமிப்பு குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.

நகராட்சி அலுவலகத்திலிருந்து தொடங்கிய இந்த ஊர்வலத்தை, சட்டப்பேரவை உறுப்பினர் வேணுகோபாலு கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இதில், நகர்மன்றத் தலைவர் (பொறுப்பு) எட்வர்ட், மாவட்ட மருத்துவ அணிச் செயலர் இளம்வழுதி, அவைத் தலைவர் வெங்கட்ராமன், நகர கூட்டுறவு தொடக்க வங்கித் தலைவர் ஏ.டி. ஆரோக்கியசாமி, நிர்வாகி டாக்டர் கணேஷ், வேளாண்மைக் கூட்டுறவுத் தலைவர் பிச்சை, கொடைக்கானல் ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் பொன்னுத்துரை, நகரச் செயலர் ஜான்தாமஸ், அதிமுக நிர்வாகிகள் சாதிக், ஸ்ரீதர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள், நகராட்சி அதிகாரிகள், நகர்ப் பகுதியைச் சேர்ந்த பள்ளி மாணவ, மாணவிகள் எனஏராளமானோர் கலந்துகொண்டனர்.

இந்த ஊர்வலமானது, மூஞ்சிக்கல், காமராஜர் சாலை, அண்ணா சாலை, கே.சி.எஸ்.திடல், பேருந்து நிலையம ஆகியப் பகுதிகள் வழியே சென்றது. மழை நீர் சேமிப்பு குறித்த வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு மாணவர்கள் கோஷமிட்டுச் சென்றனர்.

**மழை நீர் சேகரிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்: ஆட்சியர்**

மழை நீர் சேகரிப்பின் அவசியம் குறித்து மக்கள் பிரதிநிதிகள் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த முன்வர வேண்டும் என்று விருதுநகர் மாவட்ட ஆட்சியர் டி.என்.ஹரிஹரன் கேட்டுக் கொண்டார்.

விருதுநகர் தனியார் அரங்கத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் மழை நீர் சேகரிப்பை வலியுறுத்தி புதன்கிழமை கருத்தரங்கம் நடைபெற்றது.

கருத்தரங்கை தொடங்கிவைத்து ஆட்சியர் ஹரிஹரன் பேசியதாவது: தற்போதைய சூழ்நிலையில் மழை நீர் சேகரிப்பு அவசியமான ஒன்றாகும். அதனால், இது தொடர்பாக மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர்

பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த முன்வர வேண்டும்.
தண்ணீர் பற்றாக்குறையை போக்கும் வகையில் மழை நீரை சேமிப்பது குறித்தும், அதன் பயன்கள் குறித்தும் இங்கு கருத்துரை வழங்கப்பட இருக்கிறது. இதை அனைவரும் அறிந்து கொண்டு, தங்கள் கிராமங்களிலும் செயல்படுத்த வேண்டும். இப்போதைய காலகட்டத்தில் நீரின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதே சமயத்தில் நீர்நிலைகளில் நீரில் அளவு குறைந்து கொண்டே வருகிறது. எனவே நீர் ஆதரங்களில் நிலைத்தன்மையை உருவாக்குவதற்கு மழைநீர் சேகரிப்பு செயற்கை செறியூட்டும் கட்டமைப்பு ஏற்படுத்துவது அவசியமாகும்.
அதனால், குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் திறந்த வெளிக் கிணறுகள், ஆழ்துளைக்கிணறுகள் உள்ளிட்டவைகளின் அருகிலே மழை நீர் சேகரிப்பு அமைக்கும் திட்டம் 2001-ம் ஆண்டு முதல் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏற்கனவே முன்கூட்டியே அரசு அலுவலகங்கள், கண்மாய், குட்டைகள் உள்ளிட்டவைகளில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தில் பொதுமக்களின் பங்களிப்பும் இருக்க வேண்டும்.
இதற்காகவே, நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளில் புதிய வீடுகளில் மழை நீர் சேகரிப்பு கட்டாயம் அமைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வருகிறது என்று ஆட்சியர் டி.என்,ஹரிஹரன் கூறினார்.
முகாமில் குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர் புகழேந்தி வரவேற்புரை வழங்கினார். உதவி செயற்பொறியாளர் குணசேகரன் நன்றி கூறினார். இதில், ஊராட்சிகளின் உதவி இயக்குநர் பீபீஜான். நிலநீர் ஆய்வாளர்கள் கணபதிசுப்பிரமணியன், பார்த்தீபன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**நீர்வள ஆதாரத்தை மேம்படுத்த வலியுறுத்தல்**

பெரம்பலூர் மாவட்டத்தில் மழைநீர் சேகரிப்பு முறைகளை பயன்படுத்தி, நீர்வள ஆதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.
பெரம்பலூரில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் புதன்கிழமை

நடைபெற்ற ஊராட்சி தலைவர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கான மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு கருந்தரங்கை தொடக்கி வைத்த மாவட்ட ஆட்சியர் மேலும் பேசியது:

தமிழகத்தின் நீர்வள ஆதாரங்களுக்கு முதன்மையானது மழைநீராகும். நீரின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் நீர் ஆதாரங்களின் தன்மையும், நிலத்தடி நீர் மட்டமும் குறைந்து வருகிறது.

இதைகருத்தில் கொண்டு, செயற்கை முறையில் மழைநீர் சேகரிப்பு முறைகளை பயன்படுத்தி நீர்வள ஆதாரத்தை மேம்படுத்த வேண்டும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஊரக குடிநீர் திட்டங்களில் அமைக்கப்படும் நீர் ஆதாரங்கள் மூலம் திறந்தவெளி கிணறுகள், ஆழ் கிணறுகளின் அருகே செயற்கை முறையில் நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு நிலத்தடி நீர் ஆதாரங்கள் உயர்த்தப்பட்டு வருகிறது. தடுப்பணைகள், கசிவுநீர் குட்டைகள், ஆழ்துளை கிணறுகள் மற்றும் ஊரணிப் புணரமைப்பு உள்ளிட்ட பல்வேறு நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் மூலம் நிலத்தடி நீர் சேகரிக்கப்படுகிறது.

எனவே, அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளும் தங்களது பகுதிகளில் குடிநீர் பிரச்னைக்கு முக்கியத்துவம் அளித்து, பணியாற்ற வேண்டும் என்றார் ஆட்சியர் தரேஸ் அஹமது.

இதில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர் சந்திரசேகரன், நகராட்சி ஆணையர் போ. குருசாமி, வேளாண் பொறியியல் உதவி செயற்பொறியாளர் ராஜேந்திரன், உதவி நிலநீர் வல்லுநர் ஜி. பெரியசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பி.எஸ்சி. பிளான்ட் பயாலஜி, தாவரவியல் படிப்புக்கு இணையானது

பி.எஸ்சி. பிளான்ட் பயாலஜி மற்றும் பிளான்ட் பயோ-டெக்னாலஜி படிப்புகள், பி.எஸ்சி. தாவரவியல் படிப்புக்கு இணையானது என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுதவிர பி.எஸ்சி. அட்வான்ஸ்டு ஜுவாலஜி உள்ளிட்ட மேலும் 5 படிப்புகளுக்கு இணையான படிப்பு அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் தாவரவியல் படிப்புகள் இப்போது பிளான்ட் பயாலஜி, பிளான்ட் பயோ-டெக்னாலஜி என்ற பெயரில் வழங்கப்படுகின்றன. இந்தப் படிப்புகளுக்குப் பிறகு பி.எட். பட்டம் பெற்று ஆசிரியர் தகுதித் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் பட்டதாரி ஆசிரியர்களாவதில் சிக்கல் ஏற்பட்டது.

இந்தப் படிப்புகள் தாவரவியல் படிப்புக்கு இணையானது என்ற சான்றிதழ் இல்லாததால், ஆசிரியர் தேர்வு வாரியம் தாவரவியல் ஆசிரியர்களை 5 மாதங்கள் வரை நியமிக்க முடியவில்லை. உயர் கல்வித் துறையின் இந்த உத்தரவால் தாவரவியல், விலங்கியல் ஆசிரியர் பணிகளுக்கு விண்ணப்பிப்பவர்களோடு, வரலாற்று ஆசிரியர்களும் பயனடைவார்கள்.

இது தொடர்பாக உயர் கல்வித் துறைச் செயலாளர் அபூர்வ வர்மா புதன்கிழமை வெளியிட்ட உத்தரவு: தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இணையான படிப்புகளுக்கு சான்று வழங்கும் குழுவின் முடிவுகளை பரிசீலித்த பிறகு, கீழ்க்கண்ட படிப்புகள் அந்தந்த படிப்புகளுக்கு இணையானது என அறிவிக்கப்படுகிறது.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.எஸ்சி. அட்வான்ஸ்டு ஜுவாலஜி, பயோ-டெக்னாலஜி படிப்புகள், பி.எஸ்சி. விலங்கியல் படிப்புக்கு இணையானது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.எஸ்சி. பிளான்ட் பயாலஜி மற்றும் பிளான்ட் பயோ-டெக்னாலஜி படிப்புகள், அதே பல்கலைக்கழகத்தின் பி.எஸ்சி. தாவரவியல் படிப்புக்கு இணையானது.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.ஏ. வரலாறு மற்றும் சுற்றுலா படிப்பு, அந்தப் பல்கலைக்கழகம் வழங்கும் பி.ஏ. வரலாறு படிப்புக்கு இணையானது. பாரதியார் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம். படிப்பு, சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ.

படிப்புக்கு இணையானது. அதேபோன்று பாரதியார் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ. படிப்பும் சென்னைப் பல்கலைக்கழக பி.பி.ஏ. படிப்புக்கு இணையானது.

அவினாசிலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் (பெண்களுக்கான உயர் கல்வி மற்றும் மனையியல் கல்வி நிறுவனம்) ஒருங்கிணைந்த 5 ஆண்டு எம்.எஸ்சி. பொருளியல் படிப்பு - எம்.ஏ. பொருளியல் படிப்புக்கு இணையானது.

**வேளாண் பல்கலை. கலந்தாய்வு: 3-வது நாளில் 206 இடங்கள் நிரம்பின**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இளநிலை படிப்புகளுக்கான கலந்தாய்வின் 3-வது நாளில் 206 பேருக்கு அனுமதி கடிதம் வழங்கப்பட்டது.

மாணவர் சேர்க்கை கலந்தாய்வு திங்கள்கிழமை தொடங்கியது. இதில், முதல் நாளில் 204 பேரும், இரண்டாம் நாளில் 247 பேரும் சேர்ந்தனர். புதன்கிழமை நடைபெற்ற மூன்றாவது நாள் கலந்தாய்வில் 206 பேர் பல்வேறு பாடப் பிரிவுகளை தேர்ந்தெடுத்து அனுமதிக் கடிதம் பெற்றனர்.

**பண்ணை பசுமைக் கடைகள்: இதுவரை ரூ.50 லட்சத்துக்கு காய்கறிகள் விற்பனை**



சென்னையில் முதல்வர் ஜெயலலிதா தொடங்கிவைத்த மலிவு விலை காய்கறி கடைகளான பண்ணை பசுமைக் கடைகள் மூலம் இதுவரை 180 டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூ.50 லட்சம் என கூட்டுறவுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேனாம்பேட்டை காமேதேனு கூட்டுறவு சிறப்பங்காடி, அண்ணாநகர் சிந்தாமணி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை மற்றும் திருவல்லிக்கேணி டி.யூ.சி.எஸ். உள்ளிட்ட 31 இடங்களில் பண்ணை பசுமை நுகர்வோர் காய்கறிக் கடைகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தக் கடைகளில் சிலவற்றில் கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜு புதன்கிழமை ஆய்வு செய்தார்.

கடந்த ஜூன் 20-ஆம் தேதியன்று சென்னையில் 31 இடங்களில் பண்ணை பசுமை நுகர்வோர் காய்கறி கடைகளை முதல்வர் ஜெயலலிதா தொடங்கி வைத்தார். இதுவரை ரூ.50 லட்சம் வரை காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஒரு நாளைக்கு சராசரியாக 18 டன் காய்கறிகள் விற்கப்படுகின்றன எனவும், இதுவரை 180 டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் ராஜு தெரிவித்தார்.

மேலும், காய்கறிகளை விவசாயிகளிடம் நேரடியாக எந்தவொரு இடைத்தரகரும் இன்றி வாங்கப்பட்டு, அப்போதே காய்கறிகளுக்கான தொகை விவசாயிகளுக்கு ரொக்கமாக வழங்கப்படுகிறது. விவசாயிகளிடமிருந்து வாங்கப்படுகின்ற விலைக்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**04.07.2013**

## "எதிர்கால சந்ததியினர் நல்வாழ்வுக்கு ஒவ்வொரு மழைத்துளியும் முக்கியம்'

திருப்பூர்:""எதிர்கால சந்ததியினர் பயனடையும் வகையில், ஒவ்வொரு மழைத்துளியையும் பாதுகாக்க வேண்டும்," என்று கலெக்டர் கோவிந்தராஜ் அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், ஒன்றிய குழு மற்றும் ஊராட்சி தலைவர்களுக்கான மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு, திருப்பூர் தெற்கு ரோட்டரி ஹாலில் நேற்று நடந்தது. குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் தங்கராஜ் வரவேற்றார்.

கலெக்டர் கோவிந்தராஜ் பேசியதாவது:

எதிர்கால சந்ததிகள் நல்வாழ்வுக்காக, ஒவ்வொரு மழை துளியையும் பாதுகாக்க வேண்டும். கடந்த 2001-06ல் இத்திட்டம் செயல்படுத்தியபோது, நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்தது. மழைநீரை சேகரித்து, நிலத்துக்குள் இறக்குவதன் மூலமாக, ஆழ்குழாய்களும், கிணறுகளும் நீராதாரம் பெறும். கிராமப்புறத்தில் பயன்படாமல் உள்ள ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் கிணறுகளில், மழைநீரை சேகரிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுவரை, 397 ஆழ்குழாய் கிணற்றிலும், 110 பயன்படாத கிணறுகளிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகள் பயனடையும் வகையில், 1,000 பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. தேசிய வேலை உறுதி திட்ட தொழிலாளர்கள் மூலமாக, தலா 15 மீட்டர் நீள, அகலங்களுடன், 1.5 மீட்டர் ஆழத்துடன் பண்ணை குட்டைகள் உருவாக்கப்பட்டு

வருகின்றன. மேலும், குளம், குட்டைகள், ஏரிகளை அத்திட்டம் மூலமாக தூர்வாரி சுத்தப்படுத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது, என்றார்.
மாவட்ட ஊராட்சி தலைவர் சண்முகம் பேசுகையில்,""திருப்பூர் மாவட்டத்தில், தாராபுரம், ஊத்துக்குளி, மடத்துக்குளம் தவிர, மற்ற ஒன்றியங்களில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. நிலத்தடி நீரை பெருக்கும் வகையில், பயன்படாத "போர்வெல்' மற்றும் கிணறுகள் மூலமாக, மழைநீரை சேகரிக்க வேண்டும்," என்றார்.
திட்ட இயக்குனர் சம்பத் பேசுகையில், ""தற்போது இயற்கை சமன்பாடுகள் மாறியுள்ளதால், வறட்சி நிலவுகிறது. புவி வெப்பமடைந்து வருவதால், மழையும் பொய்த்து போகிறது. எனவே, மரம் வளர்ப்பதும், மழைநீரை சேகரிப்பதும் முக்கியமான பணி. கிடைக்கும் மழைநீரை வீணாக்கக்கூடாது. மழைநீரை சேகரித்து, நிலத்துக்குள் செலுத்தினால், இயற்கை சமன்பாட்டில் உள்ள முரண்பாடுகள் சீராகிவிடும்," என்றார்.
குடிநீர் வடிகால் வாரிய துணை நில நீர் வளத்துறை அலுவலர் சகாதேவன், உதவி நிர்வாக பொறியாளர் ஜெயச்சந்திரன், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழக மேலாளர் இளங்கோவன் ஆகியோர், மழைநீரை சேகரிக்கும் முறை குறித்து படக்காட்சிகள் மூலம் விளக்கினர்.

### கறிக்கோழி இறைச்சி விலைகிலோவுக்கு 60 ரூபாய் சரிவு

பல்லடம்:கறிக்கோழி இறைச்சிவிலை, ஒரே வாரத்தில்,கிலோவுக்கு, 60 ரூபாய் சரிந்துள்ளது. பல்லடம், பொங்கலூர், உடுமலை, ஈரோடு, நாமக்கல் உள்ளிட்ட பகுதிகளில், 25 ஆயிரம் கறிக்கோழி உற்பத்தி பண்ணைகள் உள்ளன. தினமும், 10 லட்சம் கறிக்கோழிகள், பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றன.
**தண்ணீர் பற்றாக்குறை:**கறிக்கோழி உற்பத்தி குறைப்பு, பண்ணைகளில் தண்ணீர் பற்றாக் குறை,கோழி உற்பத்தி பாதிப்பு ஆகிய காரணங்களால்,தேவை அதிகரித்தது. இதன் காரணமாக, கடந்த மாதம், 12ம்தேதி, ஒரு கிலோ கறிக்கோழி, பண்ணை கொள்முதல் விலை, 100 ரூபாயாக உயர்ந்தது. 24ம் தேதி வரை, இதே விலை நீடித்தது.
அப்போது, ஒரு கிலோ கோழிக்கறி, சில்லரை விலையில், 200 ரூபாய்க்கு

விற்கப்பட்டது. இந்நிலையில், மழை காரணமாக, கறிக்கோழிக்கான தேவை, குறையத் துவங்கியது.இதன் எதிரொலியாக, பண்ணை கொள்முதல் விலை, மெதுவாக சரிந்து, தற்போது, கிலோ, 65 ரூபாயாக உள்ளது. ஒரே வாரத்தில் கிலோவுக்கு, 35 ரூபாய் குறைந்துள்ளதால், கறிக் கோழி உற்பத்தியாளர்கள் மற்றும் பண்ணையாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

**உற்பத்தி செலவு:**தற்போது, ஒரு கிலோ கறிக்கோழிக்கான உற்பத்தி செலவு, 70 ரூபாய் வரை உள்ளது.கடந்த, 12ம் தேதி முதல் 24ம் தேதி வரை சில்லரை விற்பனை கடைகளில், கிலோ,200 ரூபாய்க்கு விற்கப்பட்ட கறிக்கோழி இறைச்சி, தற்போது, 140 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

## திருப்போரூர் விவசாயிகள் மலர் சாகுபடியில் ஆர்வம்

அனுமந்தபுரம்: திருப்போரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட அனுமந்தபுரம் மற்றும் சிறுங்குன்றம் ஆகிய கிராமங்களில், காய்கறி மற்றும் மலர் சாகுபடி செய்வதில், அப்பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதுகுறித்து, அப்பகுதியைச் சேர்ந்த விவசாயி ராமு கூறியதாவது: எனக்கு சொந்தமான, 80 சென்ட் நிலத்தில், 40 சென்ட் பரப்பளவில், கனகாம்பரம் பூச்செடிகளையும், 40 சென்ட் நிலத்தில், மல்லிகை பூச்செடிகளையும் சாகுபடி செய்துள்ளேன். கடந்த ஐப்பசி மாதம், கனகாம்பரம் சாகுபடி செய்தோம். இவை, 90 நாட்களுக்கு பிறகு பூக்க ஆரம்பிக்கும். இரண்டு நாட்களுக்கு ஒருமுறை, 2கிலோ பூக்கள் அறுவடை செய்யலாம். நான்கு மாதங்கள் வரை மகசூல் கிடைக்கும். இதனை, செங்கல்பட்டு மொத்த பூ வியாபாரிகளிடம் விற்பனை செய்து வருகிறோம். சாதாரண நாட்களில், ஒரு கிலோ பூ, 200 ரூபாய்க்கும், திருமணம் மற்றும் விசேஷ நாட்களில், 300 ரூபாய்க்கும் போகும். இதே போன்று, ஒருமுறை மல்லிகை செடிகள் வைத்தால், 10 ஆண்டுகள் வரை பலன் கிடைக்கும். ஆண்டுக்கு ஒரு முறை, சிறிய குழி எடுத்து உரம் வைக்க வேண்டும். அவ்வப்போது பூச்சி தாக்காமல் இருக்க, மருந்து தெளிக்க வேண்டும். சீசன் நேரத்தில், இரண்டு நாட்களுக்கு ஒருமுறை, 5 கிலோ பூ கிடைக்கும். ஒரு கிலோ பூ, 80 ரூபாய்க்கு விற்பனையாகும். இவ்வாறு, அவர் கூறினார்.

### ஆடு, மாடுகள் காய்ச்சலுக்கு சிகிச்சை

காஞ்சிபுரம்: ஏரிகள், தரிசு நிலங்களில் விளைந்துள்ள, புதிய புல்லை மேயும் ஆடு, மாடுகளுக்கு காய்ச்சல் ஏற்பட்டால், அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகலாம் என, கால்நடை உதவி இயக்குனர் ராஜன் சிஆண்டனி தெரிவித்துள்ளார். இதுகுறித்து, அவர் கூறியதாவது: கோடை வறட்சிக்குக்கு பின்னர் பருவ மழை துவங்கியுள்ளது. இதனால், ஏரிகள் மற்றும் தரிசு நிலங்களில் புதிய புற்கள் முளைத்துள்ளன. இவற்றை மேயும் ஆடு, மாடுகளுக்கு பருவ மாற்று காலங்களில் ஏற்படும் காய்ச்சல் வருவது வழக்கம். காய்ச்சல் அறிகுறிகளை அறிந்து, கால்நடை பராமரிப்பாளருக்கு தெரிவிக்க வேண்டும். அருகில் உள்ள கால்நடை மருத்துவரையும் அணுகலாம். காய்ச்சலின் தன்மை அதிகமாக இருந்தால், கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம்.

### அரசு தோட்டக்கலை பண்ணையில் செடிகள் பதியம் போடும் பணி துவக்கம்

காஞ்சிபுரம்: விச்சந்தாங்கல் அரசு தோட்டக்கலை பண்ணையில், பருவ மழையையொட்டி, பூச்செடிகள் பதியம் போடும் பணி துவங்கியது.காஞ்சிபுரம் - உத்திரமேரூர் சாலையில் அமைந்துள்ளது விச்சந்தாங்கல் கிராமம். இங்கு, 57 ஏக்கர் பரப்பளவில், அரசு தோட்டக்கலை பண்ணை செயல்பட்டு வருகிறது. மல்லி, கொய்யா, ரோஜா, கனகாம்பரம், தேக்கு உள்ளிட்ட செடிகள் இங்கு உற்பத்தி செய்யப்பட்டு, மானிய விலையில் விற்பனை செய்யப்படுகிறது. ஆண்டுதோறும், தென்மேற்கு பருவ மழைக்கு முன்பு, ஜூன் மாதத்தில் குறிப்பிட்ட செடிகளை பதியம் போடும் பணி துவங்கப்படும். அதன்படி, இந்தாண்டு ஜூன் மாதத்தில், பருவ மழை துவங்காததால், பண்ணையில் செடிகள் பதியம் போடும் பணி தாமதமாக துவங்கியுள்ளது. இதுகுறித்து, பண்ணை உதவி வேளாண்மை அலுவலர் தீனன் கூறியதாவது: பண்ணையில் தற்போது, 3 லட்சத்து 40 ஆயிரம் எண்ணிக்கையில், பல்வேறு செடிகளை பதியம் போடும் பணியை துவக்கியுள்ளோம். முதற்கட்டமாக, செம்மண், மணல் தொழு உரம் ஆகியவற்றை கலந்து, பாலிதீன் கவர்களில் அடைக்கும் பணி நடந்து வருகிறது. ராமநாதபுரத்தில் இருந்து தங்கச்சிமடம் ரக மல்லி செடியின் குச்சிகள் ஆர்டர் செய்துள்ளோம். பண்ணையில் தற்போது தேவையான தண்ணீர் இருப்பதால், மழை

பெய்யாவிட்டாலும் பதியம் போடும் பணி, இரு வாரங்களில் துவங்கப்படும். இவை மூன்று மாதங்களில் விற்பனைக்கு தயாராகிவிடும். இவ்வாறு, அவர் கூறினார்.

## தண்ணீரை உறிஞ்சுவதால் "தலை' இழக்கும் பனைகள்

கும்மிடிப்பூண்டி: போதிய மழை இல்லாததால், பயிர் நிலங்களில் அதிக மகசூல் பெற, நீர்சத்தை உறிஞ்சும் அருகில் உள்ள பனை மரங்களின் கிளைகளை வெட்டி மடிய செய்தனர். கடந்த ஆண்டு எதிர்பார்த்த மழை பெய்யாததால், ஏரி, குளம், ஆறு என, அனைத்தும் வறண்டன. கும்மிடிப்பூண்டி அடுத்த, சேலியம்பேடு கிராமத்தில், பணம் கொடுத்து தண்ணீர் பெற்று, நிலங்களுக்கு பாய்ச்சும் தண்ணீரை, சுற்றியுள்ள பனை மரங்கள் உறிஞ்சி விட்டால், நெற்பயிர்களின் மகசூல் பாதிக்கும் என, விவசாயிகள் அச்சம் கொண்டனர். அதன் விளைவாக, பனை மரங்களை மடிய செய்யும் நோக்கில், அதன் கிளைகளை வெட்டினர். தற்போது தலை இழந்து நிற்கும், அந்த பனை மரங்கள் அடுத்த சில மாதங்களில் மடிந்து சாய்ந்து விடும். மழையின்றி போனதால், பயிர் நிலங்களில் மகசூல் பாதிக்காமல் இருக்க, விவசாயிகள் கையாண்ட நடவடிக்கை, தண்ணீரின் முக்கியத்துவத்தை வருத்தத்துடன் உணர்த்துகிறது. இதுகுறித்து, அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் சிலர் கூறுகையில், ""நாங்கள் வேண்டுமென்றே இவற்றை வெட்டுவதில்லை. வேறு வழியில்லாமல், பனை மரத்தை வெட்டுகிறோம்," என்றனர்.

## அவுரி செடி பயிரிடுவதில் விவசாயிகள்... திண்டிவனம் பகுதியில் அமோகம்

திண்டிவனம்:திண்டிவனம் பகுதியில் அவுரி செடி பயிர் செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர். திண்டிவனம் அடுத்த கிளியனூர், கொங்கரப்பட்டு, உப்புவேலூர், முருக்கேரி, வடநெற்குணம், ஆலங்குப்பம், பிரம்மதேசம் உள்பட 50 க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள விவசாய நிலங்களில் தர்பூசணி, மணிலா, நெல், கேழ்வரகு, கம்பு பயிர்கள் அதிகளவில் பயிரிடப்பட்டு வந்தனர்.
வெயில் மற்றும் தண்ணீர் பிரச்னை ஏற்பட்டதால் சில மாதங்களாக விவசாயிகள் பயிர் செய்ய அதிக ஆர்வம் காட்டவில்லை. ஆர்வம் தற்போது பல விவசாயிகள்

அவுரி செடி பயிர் செய்ய அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். அவுரி செடி பயிர் செய்தால் உரம், பூச்சிகொல்லி மருந்து தேவையில்லை. தண்ணீர் அதிகளவில் தேவையில்லை. இதனால் குறைந்தளவே செலவு ஆகிறது.
கோடைக்காலங்களில் கிணற்று பாசனத்தில் கிடைக்கும் குறைந்த நீரால் வேறு எந்த பயிர்களும் செய்ய முடியவில்லை. இதனால் விவசாயிகளுக்கு அவுரி செடி பயிர் செய்வது லாபமாக உள்ளது.
மேலும், அவுரி செடி பயிர் ஒரு முறை செய்தால் போதும். முதல் அறுவடை 90 நாளிலும் இரண்டாவது அறுவடை 50 நாள் என ஐந்து முறை அறுவடை செய்யலாம். ஒரு ஏக்கருக்கு சுமார் 50 ஆயிரம் வரை லாபம் பெறலாம்.
மாடுகள் மேயாது கூலி ஆட்கள் தேவையில்லை 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் விட்டால் போதும். மாடு,  ஆடுகள் மேய்வதில்லை. இதில் காய்ப்பு திறன் இல்லை, அறுவடைக்கு என நாள் இல்லை. தழை வளர்ந்தால் அறுவடை செய்யலாம். வேறு எந்த பயிரிலும் இந்த அளவுக்கு லாபம் கிடைக்காது என விவசாயிகள் கூறுகின்றனர். கிராக்கி ஜப்பான், ஜெர்மனி, ரஷ்யா ஆகிய வெளிநாடுகளில் நல்ல கிராக்கியுள்ளதால் வியாபாரிகள் விவசாய நிலத்திற்கே வந்து வாகனங்களில் ஏற்றிச் செல்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு போக்குவரத்து செலவும் இல்லை. இதனால் இப்பகுதி விவசாயிகள் அவுரி செடி பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.வியாபாரி பத்மநாபன் கூறியதாவது.அவுரி செடியில் உள்ள தழைக்கு வெளிநாடுகளில் அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. இந்த தழையை மருந்து தயாரிக்க பயன்படுத்துகின்றனர்.
ஒரு டன் அவுரி தழை ரூபாய் 50 ஆயிரத்திற்கு விற்கலாம். இதை பயிர் செய்வதால் விவசாயிகளுக்கு அதிக செலவு இல்லை. பயிர் செய்ய முடியாத நிலங்கள் மற்றும் தென்னை மரம், மாமரம், கொய்யா மரங்களோடு ஊடு பயிராக செய்யலாம். இதனால் விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும் .

## மழைநீர் சேகரிப்பு குறித்த கருத்தரங்கு

விழுப்புரம்:தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் குறித்து உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கான கருத்தரங்கு விழுப்புரத்தில் நடந்தது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வை பொறியாளர் அமல்ராஜ், கருத்தரங்கை துவக்கி வைத்தார். நகராட்சி, ஒன்றியம், பேரூராட்சி சேர்மன்கள், ஊராட்சி தலைவர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தகவல் தொடர்பு மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு பஞ்சாயத்து ராஜ் நிறுவன உறுப்பினர்களும் பங்கேற்றனர். அனைத்து கிராம மற்றும் நகர குடிநீர் திட்டங்களில் மழை நீர் சேகரிப்பு ஓர் அங்கமாக்கப்பட்டுள்ளது. மழைநீர் சேகரிப்பு திட்டங்களில் செயல்படுத்த தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை அரசுத் துறைகளில் இலவசமாக வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதைப் பற்றியும் விளக்கப்பட்டது. மாவட்ட ஊராட்சிகளின் உதவி இயக்குனர் தினகர்சாம்சன் பாபு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்கள் ஞானசேகரன், விஸ்வநாதன், புவியியல் வல்லுநர் கோபாலகிருஷ்ணன், பி.ஆர்.ஓ., சிங்காரம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### செம்மை கரும்பு சாகுபடி பயிற்சி

விக்கிரவாண்டி:முண்டியம்பாக்கம் ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை சார்பில் செம்மை சாகுபடி குறித்த மூன்று நாள் பயிற்சி நடந்தது.

சர்க்கரை ஆலை வளாகத்தில் நடந்த பயிற்சி ஆலை துணை பொது மேலாளர் கார்த்தி கேயன் தலைமை தாங்கினார்.

நபார்டு வங்கி உதவி மேலாளர் விக்ரமன், துணை பொது மேலாளர் (கரும்பு)சங்கரலிங்கம் முன்னிலை வகித்தனர். கரும்பு பயிற்சி அலுவலர் வித்யா வரவேற்றார். முகாமில் நவீன கரும்பு சாகுபடியில் சொட்டு நீர் பாசனம் அமைத்துவிவசாயம் செய்தல், பூச்சி நோய் தாக்குதல், பராமரிப்பு,உழவியல் முறைகள் குறித்து திண்டிவனம் வேளாண்மை பல்கலை கழக துறைத் தலைவர் ராமசுப்பிரமணியம், அன்புமணி , துணை பொது மேலாளர் லட்சுமணன் பயிற்சியளித்தனர். ஆலையின் சார்பில் ஒரு பரு விதைக்கரணை கொண்டு கரும்பு பயிர் செய்த 10 விவசாயிகளுக்கு தலா ரூபாய் 7

200 வீதமும், பசுமை குடில் திட்டத்தில் கரும்பு பயிர் செய்த இரண்டு விவசாயிகளுக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதமும் காசோலைகள் வழங்கப்பட்டது. கரும்பு மேலா ளர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

## உழவர் கையேடு பெற உதவி இயக்குனர் அறிவுரை

செஞ்சி:செஞ்சி வட்டார விவசாயிகள் தவறாமல் உழவர் கையேடு பெற்றுக்கொள்ளும் படி வேளாண்மை உதவி இயக்குனர் கேட்டுக்கொண்டுள்ளார். செஞ்சி வேளாண்மை உதவி இயக்குனர் சுகுமார் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: வேளாண்மைத்துறை மூலம் அனைத்து விவசாயிகளுக்கும் ஒருங்கிணைந்த உழவர் கையேடு தயாரித்து வழங்கப் படுகிறது. செஞ்சி வட்டார விவசாயிகள் தங்களது பெயர், முகவரி, மொபைல் எண், வங்கி கணக்கு எண், பயிர் விவரம், சர்வே எண் ஆகியவற்றை வேளாண்மைத்துறையின் படிவம் ஏ மூலம் பூர்த்தி செய்து, 2 பாஸ் போட் சைஸ் போட்டோ மற்றும் மண் மாதிரியுடன், ஆய்வு கட்டணத்தை அந்தந்த பகுதி உதவி வேளாண்மை அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும். மண்மாதிரியை ஆய்வு செய்து மண்ணின் தரம், சத்து விவரம் கையேட்டில் குறித்து தரப்படும். இந்த கையேடு இல்லாத விவசாயிகளுக்கு வருங்காலத்தில் வேளாண்மைத்துறை மூலம் எவ்வித மான்யம், வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணம் வழங்கப்படமாட்டாது. வாய்ப்பை பயன்படுத்தி பயனடையலாம்.

## மகசூல் அதிகரிப்பது குறித்து செஞ்சியில் பயிற்சி முகாம்

செஞ்சி:செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை களப்பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு கரும்பு சாகுபடியில் நுண்ணுயிர் உரங்களை பயன்படுத்தி மகசூலை அதிகரிப்பது குறித்த பயிற்சி முகாம் செஞ்சி பாத்திமா திருமண மண்டபத்தில் நடந்தது. திரவ நிலை உயிர் உரங்கள், பயோ வாம், யூமிக் அமிலம், மக்கிய கரும்பு ஆலைக்கழிவு, ராஜ்ஸ்ரீ பயோ கம்போஸ் மற்றும் சாம்பல் கலந்து கரும்பு பயிரில் இடும் போது ரசாயன உரங்களின் தேவை 30 சதவீதம் குறைத்து மகசூலை அதிகரிக்கும் தொழில் நுட்பம் விளக்கப்பட்டது.

முதுநிலை துணை தலைவர் (கரும்பு) கிருஷ் ணன், துணை தலைவர்கள் ரமேஷ், சத்தியமூர்த்தி, துணை பொது மேலாளர்கள் விஜயகுமார், லட்சுமணன், பிரசன்னா, உதவி பொது மேலாளர் பாஸ்கர்தாஸ் பங்கேற்றனர்.

### வறட்சி பாதிப்பு எதிரொலி: நெல் சாகுபடி பரப்பு அதிகரிக்க வாய்ப்பு

தியாகதுருகம்:பருவமழை கடந்த ஆண்டு பொய்த்ததன் எதிரொலியாக புதிய கரும்பு நடவு செய்ய கள்ளக்குறிச்சி பகுதி விவசாயிகள் தயக்கம் காட்டி வருவதால் இவ்வாண்டு நெல்சாகுபடி அதிகரிக்க வாய்ப்புள்ளது.

கள்ளக்குறிச்சி மற்றும் சுற்றியுள்ள சங்கராபுரம், சின்னசேலம், தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் 1 லட்சம் ஏக்கர் பரப்பில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. கரும்புக்கு நல்ல விலை கிடைத்ததாலும், புதிய தனியார் சர்க்கரை ஆலைகள் இப்பகுதியில் கட்டியதாலும் 3 ஆண்டில் மட்டும் 30 ஆயிரம் ஏக்கர் பரப்பில் கரும்பு பயிரிடுவது அதிகரித்தது. இதனால் நெல் சாகுபடி பரப்பு வெகுவாக குறைந்தது.

ஆண்டு தோறும் புதிதாக கரும்பு சாகுபடி செய்யும் பரப்பு சராசரியாக 5 ஆயிரம் ஏக்கர் அதிகரித்தது. ஆண்டுப் பயிராக கரும்பு உள்ளதால் ஏரி, அணைக்கட்டு நீரை மட்டுமின்றி கிணற்று நீர் பாசனத்தை நம்பி பயிரிடப்படுகிறது.

கடந்த ஆண்டு பருவ மழை ஏமாற்றியதால் நீர் நிலைகள் நிரம்பாமல் ஏரி, அணைகள் மூலம் போதிய நீர்பாசனம் கிடைக்கவில்லை.

கோடை வறட்சியில் 20 ஆயிரம் ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்திருந்த கரும்பு பயிர்கள் கருகின. கிணற்று நீர் பாசனம் கைகொடுக்காமல் ஏமாற்றியது. மே மாதம் இறுதி வாரத்தில் பெய்த மழை கரும்பு பயிர்கள் மேலும் கருகாமல் காப்பாற்றியது. தென்மேற்கு பருமழை துவங்கி 1 மாதம் ஆன போதிலும் எதிர்பார்த்த மழை கள்ளக்குறிச்சி பகுதியில் பெய்யவில்லை. இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயரவில்லை. வரும் காலங்களில் எதிர்பார்த்த மழை கிடைக்குமா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

இதனால் புதிய கரும்பு நடவு செய்வதை விவசாயிகள் தவிர்த்து வருகின்றனர். கருகிய கரும்பு பயிர் நிலங்களை திருத்தி நெல் சாகுபடி செய்ய திட்டமிட்டுள்ளதால் இவ்வாண்டு நெல் பயிரிடும் பரப்பு இப்பகுதியில் அதிகரிக்கும்.

### மழையை நம்பி துளசி சாகுபடி: கிராமப்புற விவசாயிகள் ஆர்வம்

சேலம்: வீடுகளில், முற்றத்தில் துளசி மாடம் அமைத்து வழிபடும் பழக்கமும் நம்மிடையே உள்ளது. துளசியை தினமும் பயன்படுத்தினால், சளி, இருமல்

தொந்தரவு வராது. அனைத்து இடங்களிலும் பரவலாக விளையக்கூடியது துளசி.சமீபத்தில் ஏற்பட்ட வறட்சிக்கு துளசி செடிகளும் தப்பவில்லை. பல இடங்களில் தண்ணீரின்றி துளசி செடிகள் காய்ந்து நின்றது. இந்நிலையில், சேலம் மாவட்டத்தில் செட்டிச்சாவடி, விநாயகம்பட்டி, கொண்டப்பநாயக்கன் பட்டி போன்ற கிராமங்களில், சில விவசாயிகள் சமீபத்தில், பெய்த மழையை நம்பி துளசியை பயிரிட்டுள்ளனர். மழையினால், துளசி செடிகள் துளிர் விட்டு பச்சை பசேலென காட்சி தருகிறது. அனைவரின் வீட்டிலும் வளர்க்கப்பட்டு வந்த துளசி, இன்று வணிக நோக்கத்தில் பயிரிடப்படுகிறது.இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:துளசியில் கருந்துளசி, நல்ல துளசி என இரண்டு ரகங்கள் உள்ளன. இரண்டு ரகங்களுமே மேட்டுப்பாங்கான நிலங்களில், மழையை நம்பி வளரக்கூடியது.தற்போது, துளசி செடிகளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. வயல்களின் ஓரம், வீட்டு தோட்டம் ஆகிய இடங்களில் துளசி செடிகள் வளர்க்கப்படுவது குறைந்து வருகிறது. இதனால், துளசி செடிகளை மற்ற பயிர்களை போல, பாதுகாப்புடன் சாகுபடி செய்து வருகிறோம். கோவில்களிலும், ஆயுர்வேதிக் மருந்தகங்களிலும் துளசி செடியை அதிகம் பயன்படுத்துகின்றனர்.தற்போது, பெய்து வரும் மழையை நம்பி, துளசி செடி பயிரிடப்பட்டுள்ளது. இதற்கு பலனும் கிடைத்துள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

### டன் ஒன்றுக்கு ரூ.4,500 அறிவிக்கணும்

மோகனூர்: "மத்திய, மாநில அரசுகள், எதிர்வரும், 2013-14ம் அரவை பருவத்துக்கு, டன் ஒன்றுக்கு, 4,500 ரூபாய் கரும்பு விலை அறிவிக்க வேண்டும்' என, பேரவைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.மோகனூர் சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கத்தின், 30வது பேரவைக்கூட்டம், நாவலடியான் திருமண மண்டபத்தில், நேற்று நடந்தது.சங்கத் தலைவர் கந்தசாமி தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் வக்கீல் நடராஜன் ஆண்டறிக்கை வாசித்தார். பொருளாளர் ஸ்ரீதரன், துணைத் தலைவர்கள் எட்டிக்கன், ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில், மத்திய, மாநில அரசுகள், எதிர்வரும், 2013-14ம் அரவை

பருவத்துக்கு, டன் ஒன்றுக்கு, 4,500 ரூபாய் கரும்பு விலை அறிவிக்க வேண்டும். கரும்பு வெட்டுக்கூலி, வாகன வாடகை முழுவதையும், ஆலை நிர்வாகமே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

சர்க்கரை ஆலை அங்கத்தினர்கள் பங்கு மூலதனத்துக்கு, "டிவிடெண்டு' சட்டப்படி கணக்கிட்டு, ஆலை நிர்வாகம், விரைவில் வழங்க, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டு காய்ந்துகொண்டிருக்கும் கரும்பை, உடனடியாக முன்னுரிமை அடிப்படையில், ஆலை நிர்வாகம் வெட்டிக் கொள்ள வேண்டும்.ஆலைக்கு பதிவு செய்யப்பட்ட கரும்பு பயிருக்கு, தேவையான உரங்களை, ஆலை நிர்வாகமே, மானிய விலையில், விவசாயிகளுக்கு சப்ளை செய்ய வேண்டும். வறட்சியால், ஆலைக்கு பதிவு செய்யப்பட்ட கரும்பு பயிர் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பெற்றுள்ள கூட்டுறவு கடன்களை, அசல், வட்டியுடன் தள்ளுபடி செய்ய, ஆலை நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.வறட்சியால், ஆலைக்கு பதிவு செய்யப்பட்ட கரும்பு பயிர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு, 25 ஆயிரம் ரூபாய் நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கரும்பு பயிருக்கு, கூட்டுறவு வங்கியில், விவசாயிகளுக்கு வழங்கும் கடன் தொகையில், பயிர் இன்ஷூரன்சுக்கென, குறிப்பிட்ட சதவீதத் தொகை பிடித்தும் செய்யப்படுகிறது.ஆனால், எந்த விவசாயிக்கும், இதுவரை, பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இன்ஷூரன்ஸ் தொகை வழங்கவில்லை. இனிமேல், எந்த பயிர்க்கடன்களுக்கும், இன்ஷூரன்சுக்கென எவ்வித தொகையும், கூட்டுறவு வங்கிகள் பிடித்தம் செய்யக்கூடாது எனபது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.முன்னதாக, புதிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதன்படி, தலைவராக கந்தசாமி, பொதுச் செயலாளராக வக்கீல் நடராஜன், பொருளாளராக ஸ்ரீதரன் மற்றும் துணைத் தலைவர், துணைச் செயலாளர், நிர்வாக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## சாமந்திப்பூ விலை அதிகரிப்புவிவசாயிகள் மகிழ்ச்சி

தர்மபுரி: சாமந்தி பூ விலை அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தர்மபுரி மாவட்டத்தில், சாமந்தி பூ தர்மபுரி, தொப்பூர், பென்னாகரம் பாலக்கோடு, மாரண்டஹள்ளி உள்ளிட்ட பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகிறது. மாலைகள் கட்டவும், பூஜை மற்றும் அலங்காரத்துக்கு சாமந்தி பூ முக்கிய பங்கு வகிக்கிறது.

சந்தையில் சாமந்தி பூவுக்கு ஆண்டு முழுவதும் வரவேற்பு உள்ளது. குறிப்பாக திருமண சீசன் மற்றும் கோவில் விழா காலங்களில் சாமந்தி பூவுக்கு சந்தையில் கூடுதல் விலை கிடைப்பதால், விவசாயிகள் சாமத்தி பூக்களை விழா காலங்களில் மையப்படுத்தி அதிகளவில் சாகுபடி செய்து வருகின்றனர்.

சாமந்தி பூ சாகுபடிக்கு, ஒரு ஹெக்டேருக்கு தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பாக, 12 ஆயிரம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படுகிறது. இதனால், ஆண்டுக்கு, ஆண்டு சாமந்தி பூ சாகுபடி அதிகரித்து வருகிறது.கடந்தாண்டு, 2,100 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த, சாமந்தி இந்தாண்டு, 2, 800 ஹெக்டேர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது ஆனி மாதத்தில் பல்வேறு சுப காரியங்கள் நடந்து வருவதால், சாமந்தி பூவுக்கு நல்ல விலை கிடைப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## உரங்கள் தர பரிசோதனை விவசாயிகள் எதிர்பார்ப்பு

செம்பட்டி:தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில், நீண்டகாலம் இருப்பில் உள்ள உரங்களை தரப்பரிசோதனைக்கு உட்படுத்த வேளாண்மை துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு விதைகள்,உரங்கள் மற்றும் இடுபொருட்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம்,மானிய விலையில் விற்கப்படுகின்றன. பருவமழை பொய்த்து போனதால், வறட்சி ஏற்பட்டது. விவசாயம் பாதிக்கப்பட்டது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில், இருப்பில் இருந்த உரங்கள் விற்பனையின்றி தேங்கியது.

நீண்டகாலம் இருப்பு வைக்கப்பட்டிருக்கும் உரங்கள் வீரியம் குறையவும், பயன்பாட்டிற்கு தகுதியற்ற நிலையை அடையவும் வாய்ப்புள்ளது.

இதனால் ஏற்படும் நஷ்டத்தை தவிர்ப்பதற்காக ஒருசில கூட்டுறவு சங்கங்களில், நீண்டகால இருப்பில் இருந்த உரங்கள் விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் கூறுகின்றனர்.
சித்தயன்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க செயலாளர் முத்துரமணா கூறுகையில்,"" உரங்களுக்கு காலாவதியாவதற்கான காலக்கெடு எதுவுமில்லை. இறுகி கெட்டியானால்,மீண்டும் தூளாக்கி பயன்படுத்த முடியும்," என்றார்.
ஆத்தூர் வட்டார வேளாண்மை அலுவலர் விஜயன் கூறும்போது,"" நீண்டநாள் இருப்பில் வைத்தால் உரங்களின் வீரியம்,ஈரப்பதம் குறையும். சோதனை செய்த பிறகுதான் விவசாயத்திற்கு பயன்படுத்த வேண்டும்,"என்றார்.

## கோழிப்பண்ணைக்கு மானியம் மாவட்டத்தில் துவக்க திட்டம்

திண்டுக்கல்:நாட்டுக்கோழிப் பண்ணை அமைக்க 50 சதவீதம் அரசு மானியத்துடன் கோழி வளர்ப்பு திட்டத்தினை செயல்படுத்த உத்தரவு பிறப்பித்துள்ளது.
நாட்டுகோழி பண்ணைகள் அமைக்க விருப்பம் உள்ளவர்கள் கொட்டகைகள் அமைப்பதற்கான செலவில் 25 சதவீதம் மானியமாக வழங்கப்படும். நபார்டு வங்கியின் கோழி துணிகர முதலீட்டு நிதியிலிருந்தும் 25 சதவீதம் மானியம் வழங்கப்படும்.  மீதமுள்ள 50 சதவீதத்தை பயனாளிகள், சொந்த செலவிலோ அல்லது வங்கியிலிருந்து கடனாகவோ பெற்றுக்கொள்ளலாம்.
நாட்டு கோழிகளை ஆண்டு முழுவதும் விவசாயிகள் வளர்க்க ஊக்கப்படுத்தும் வகையில் இரண்டாம் தொகுப்பு கோழிக்குஞ்சுகள் வாங்கும் செலவில் தமிழக அரசின் சார்பில் 50 சதவீதம் மானியமும், மூன்றாம் தொகுப்பில் கோழிக்குஞ்சுகள் வாங்கும் செலவில் 30 சதவீதம் மானியமும் வழங்கப்படும்.
ஒரு நபருக்கு 250 எண்ணிக்கை கொண்ட நாட்டுக்கோழிகளும், 240 நாட்டுக்கோழி பண்ணைகள் அமைப்பதற்கான மானியமும் அளிக்கப்படும்.
விவசாயிகள், தொழில் முனைவோர், சுய உதவி குழுவினர் சேர்ந்து கொள்ளலாம். கோழிப்பண்ணை அமைப்பதற்கான இடம், தொழில் துவங்குபவரின் பெயரிலோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் பெயரிலோ இருக்க வேண்டும்.
தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும்

அறிவியல் பல்கலை கீழ் இயங்கும் பயிற்சி மையங்களில் 5 நாட்கள் பயிற்சி அளிக்கப்படும். விருப்பம் உள்ளவர்கள் மண்டல இணை இயக்குனரை மொபைல் போன் எண்- 94450-01114 ல் தொடர்பு கொள்ளலாம்.

## சொட்டு நீர் பாசன விவசாயத்தால் பலனில்லை! தோட்டக் கிணறுகள் வற்றியதால்

பழநி:மழையில்லாததால் திண்டுக்கல் மாவட்டத்தில் தோட்டக்கிணறுகள், குளங்களில் தண்ணீர் வற்றியதால், சொட்டுநீர்ப் பாசன விவசாயம் பலனின்றி, விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பழநி, ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, ரெட்டியார்சத்திரம் உட்பட பல்வேறு பகுதிகளில் சுமார் 5,500 ஹெக்டேர்

பரப்பளவில் மா, தென்னை,வாழை, கொய்யா, நிலக்கடலை, மக்காசோளம் பயிரிடப்படுகிறது.  சொட்டுநீர் பாசனம்: அரசு மானியத்துடன், வேளாண்மை, தோட்டக்கலை, பொறியியல் துறையினர் உதவியுடன், மாவட்டத்தில் பல்வேறு இடங்களில், விவசாயிகள் சொட்டுநீர் பாசன முறையில் விவசாயம் செய்து வருகின்றனர். பாதிப்பு: கடந்த பல ஆண்டுகளாக இல்லாத அளவிற்கு இந்தாண்டு வறட்சி ஏற்பட்டுள்ளது. நீர் ஆதாரங்களான குளங்கள், அணைகள் வற்றியுள்ளது.போதிய மழையில்லாததால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்துள்ளது. இதனால் சொட்டுநீர் பாசனம் முறையில் பயிர்கள்,செடிகளுக்கு தேவையான அளவு தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை.  வேப்பன்வலசு விவசாயி முத்துசாமி கூறுகையில்,""அரசு மானியத்துடன், தென்னை,கொய்யா தோப்புகளில் சொட்டு நீர்பாசனம் அமைத்துள்ளேன். கிணறுகளில் தண்ணீர் இல்லாததால், பாதிக்கப்பட்டுள்ளோம். கொய்யா, தென்னையில் காய்ப்பு குறைந்துள்ளது. தொடர்ந்து மழைபெய்தால் மட்டுமே பலன் பெற முடியும்,' என்றார்.

## அணைகளின் நீர்மட்டம் குறைகிறது மழை பெய்யாததால் விவசாயிகள் கவலை

பழநி:கோடை மழை பெய்யாததால், பழநி வட்டாரத்திற்கு விவசாயபாசன நீர், குடிநீர் வழங்கும் அணைகளின் நீர்மட்டம் குறைந்து வருகிறது.

இந்தாண்டு பழநி மற்றும் சுற்றுவட்டாரத்தில் வறட்சி நிலவுகிறது.

இதன்காரணமாக, குளங்கள்,கால்வாய்களிலும்

தண்ணீர் இல்லை. நிலத்தடி நீர்மட்டமும் குறைந்துள்ளது. பாசனக் கிணறுகளும் வற்றியுள்ளது. பருவமழையை நம்பி, நெல், வாழை, கொய்யா நடவுப்பணிகளை மேற்கொண்டுள்ள விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

அணைகளின் நேற்றைய நிலவரம்:

* பாலாறு பொருந்தலாறு அணையில் வினாடிக்கு 7 கன அடி குடிநீருக்காக வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 22.08 அடி (மொத்த உயரம் 65 அடி).

* குதிரையாறு அணையில் 3 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 24.28 அடி (மொத்த உயரம் 80 அடி).

* வரதமாநதி அணையில் 2 கன அடி குடிநீர் தேவைக்காக வெளியேற்ற படுகிறது. நீர்மட்டம் 23.28 அடி (மொத்த உயரம் 67 அடி).

* பரப்பலாறு அணையில் 3 கன அடி குடிநீர் தேவைக்காக வெளியேற்ற படுகிறது. நீர்மட்டம் 29.17 அடி (மொத்த உயரம் 90 அடி).

* நங்காஞ்சியாற்றின் நீர்மட்டம் 20.84 அடி (மொத்த உயரம் 40 அடி), குடகனாறு அணையின் நீர்மட்டம் 9.14 அடி (மொத்த உயரம் 27.4 அடி).

பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,""கொடைக்கானலில் தொடர் மழை பெய்ந்தால் மட்டுமே வரதமாநதி அணைக்கு தண்ணீர் வர வாய்ப்புள்ளது. பாலாறு பொருந்தலாற்றில் இருந்து குடிநீர் தேவைக்காக தண்ணீர் திறந்து விடப்படுகிறது. தென்மேற்கு பருவமழை பெய்ந்தால் மட்டுமே, மற்ற அணைகளின் நீர்மட்டம் உயரும்,'' என்றார்.

### உழவர்சந்தையில் மாணவர்கள் பயிற்சி

தேனி:பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், 4ம் ஆண்டு படிக்கும் மாணவர்கள் கிராம தங்கல் திட்டத்தில், ஆண்டிபட்டியில் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்கள் ஆண்டிபட்டி உழவர்சந்தையில் பயிற்சி பெற்றனர். உழவர்சந்தை நிர்வாக அலுவலர் சந்தோஷ் குமார், உதவி நிர்வாக அலுவலர் ராதாகிருஷ்ணன் உழவர்சந்தை செயல்படும் விதம், காய்கறிகளின் வரத்து மற்றும் விலை நிலவரம் பற்றி விளக்கினர். உழவர்சந்தையின் பலன்களை விவசாயிகளுக்கும், நுகர்வோர்களுக்கும் விளக்கி சொல்லுமாறு, மாணவர்களுக்கு

அறிவுறுத்தினர். மாணவர்கள் குழு தலைவர் தினேஷ் குமார் நன்றி கூறினார்.

## விடுபட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க பட்டுவாடாவில் முறைகேடு நடப்பதாக புகார்

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சியால் பாதித்த விவசாயிகளுக்கு வழங்கியது போக, மீதமுள்ள 23 கோடி ரூபாய் நிவாரண தொகையை, விடுபட்ட விவசாயிகளுக்கு வழங்க வேண்டும், என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்தாண்டு திருவாடானை, பரமக்குடி, கமுதி, முதுகுளத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் ஒரு லட்சத்து 17 ஆயிரம் எக்டேர் நெல் விவசாயம் செய்யப்பட்டது. இதில், பருவமழை பொய்ப்பால் ஒரு லட்சத்து 9 ஆயிரம் எக்டேர் நிலங்களில் பயிரடப்பட்ட சாவியாகி போகின. இதனால், கடன் வாங்கி விவசாயம் செய்த விவசாயிகள் பெரிதம் நஷ்டம் அடைந்தனர். மாவட்டத்தின் நெற்களஞ்சியமான திருவாடானை பகுதியில் மட்டும் 40 ஆயிரம் எக்டேர் விவசாய நிலங்கள் விளைச்சல் இன்றி பாதிக்கப்பட்டன. மீதமுள்ள 69 ஆயிரம் எக்டேர் நிலங்கள் ராமநாதபுரம், திவாடானை, பரமக்குடி, முதுகுளத்தூர், கமுதி உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மத்திய அரசு நிவாரண தொகை வழங்க முடிவு செய்தது. அதன்படி, ராமநாதபுரம் மாவட்டத்திற்கு 131 கோடியே 65 லட்சத்து 86 ஆயிரத்து 48 ரூபாய் வறட்சி நிவாரண தொகையாக வழங்கப்பட்டது. 50 சதவீத்திற்கும் மேல் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நிலங்கள் அந்தந்த பகுதி வி.ஏ.ஓ., மூலம் சர்வே எடுத்து அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டன. கணக்கில் சேர்க்கப்படாத, பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும், என தொடர்ந்து மனு கொடுத்தனர். பரமக்குடி விவசாயி செல்வமணி கூறியதாவது: கணக்கு சரியாக எடுக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நிலங்களை மீண்டும் சர்வே எடுத்து, அவர்களுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும். மீதமுள்ள 23 கோடி ரூபாய் நிவாரண தொகையை, விடுபட்ட விவசாயிகளுக்கு வழங்க வேண்டும், என்றார். மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி பொது மேலாளர் பிரான்சிஸ் கூறியதாவது: மாவட்டத்தில் கடந்த ஜூன் 30ம் தேதி வரை, கூட்டுறவு கடன்

சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு நிவாரண தொகை ரொக்கமாகவும், ஜூலை 1 முதல் காசோலையாகவும் வழங்கப்படுகிறது. வாங்காத விவசாயிகள் முறையான ஆவணங்கள் இல்லாததால், அவர்களின் தொகையை, வருவாய்த்துறை ஒத்துழைப்போடு, மோசடியாக பெற முயற்சிப்பதாக புகார் எழுந்தது. இதனால், உரிய பயனாளிகளுக்கு நிவாரண தொகை சென்றடைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள நிலுவை தொகை, விவசாயிகளுக்குதான் வழங்கப்படும். திருப்பி அனுப்புவது தொடர்பாக இதுவரை தகவல் இல்லை, என்றார்.

## விவசாயிகளுக்கு ரூ.56.40 லட்சம் மானியம்வேளாண் இன்ஜினியரிங் துறை அழைப்பு

திருநெல்வேலி:நெல்லை மாவட்டத்தில் 56.40 லட்சத்தில் மானியத்துடன் திட்டங்களை பயன்படுத்த விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. நெல்லை மாவட்டத்தில் தமிழ்நாடு நீர் வள நில வள திட்டத்தின் கீழ் கலிங்கலாறு, நிஷபநதி, தேவியாறு, அனுமன் நதி, கருமேனியாறு உப வடி நில பகுதிகளில் நுண்ணீர் பாசனம் அமைத்திட 47.60 லட்சம் ரூபாய் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 119 எக்டேர் பரபப்பில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நுண்ணீர் பாசனத்தை சிறு குறு விவசாயிகள் 100 சதவீதம் மானியத்திலும், இதர விவசாயிகள் 75 சதவீத மானியத்திலும் அமைக்கலாம்.இதுசம்பந்தமாக மேலும் விபரங்களை தெரிந்து கொள்ள விரும்புகிறவர்கள் நெல்லை, சேரன்மகாதேவி, தென்காசி பகுதிகளில் வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர்களை அணுகலாம். வெங்காயம் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு வெங்காய சேமிப்பு கிடங்கு 50 சதவீத மானியத்தில் அமைக்க 80 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு மெ. டன்னுக்கு 4 ஆயிரம் ரூபாய் வீதம் 20 மெ.டன் கொள்ளளவு கட்டுமானத்தில் கிடங்கு அமைக்கலாம். வெங்காய சேமிப்பு கிடங்கு அமைக்க மெ.டன் ஒன்றுக்கு 8 ஆயிரம் ரூபாய் செலவாகும். மேலும், மிளகாய் உற்பத்தி செய்யும் விவசாய குழுக்களுக்கு சூரிய சக்தி கூடார மிளகாய் உலர்த்தி 100 சதவீத மானியத்தில் அமைக்க தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் 8 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு

செய்துள்ளது.வெங்காய சேமிப்பு கிடங்கு மற்றும் சூரிய சக்தி மிளகாய் உலர்த்தி அமைக்க விரும்பும் விவசாயிகள் நெல்லை என்.ஜி.ஓ காலனியில் உள்ள வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளரை அணுகலாம் என்று கலெக்டர் சமயமூர்த்தி தெரிவித்தார்.

## 135 டன் விதை நெல் இருப்புவைப்புவேளாண் உற்பத்தி சங்கம் அறிவிப்பு

கோபிசெட்டிபாளையம்: ""தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்காக, கோபி வேளாண்மை உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தில், 135 டன் விதை நெல் தயார் நிலையில் உள்ளது," என, சங்க தலைவர் காளியப்பன் தெரிவித்தார்.கேரளா, நீலகரி பகுதியில் தென்மேற்கு பருவமழை பெய்து வருவதை தொடர்ந்து, பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 59 அடியாக உயர்ந்தது. இதனால், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டு, விவசாயப்பணிகள் தீவிரமாக துவங்கி உள்ளது.குறிப்பிட்ட வயல் பகுதியில் நாற்று விடும் பணியும், மற்றொரு புறம் வயல்களை சமன்படுத்தும் பணியும் நடக்கிறது. சென்ற இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் நெல் சாகுபடி பரப்பளவு குறைந்து விட்டது. பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படாததால், ஒரு போகத்தில் மட்டுமே நெல் சாகுபடி நடக்கிறது.கோபி வேளாண்மை உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தின் மூலம், தமிழகம் முழுவதும் தரமான விதை நெல் சப்ளை செய்யப்படுகிறது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் தண்ணீர் திறக்கப்பட்டதை தொடர்ந்து, விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஏ.எஸ்.டி., 16, ஏ.டி.டி., 45, ஏ.டி.டி., 39, பி.பி.டி., 5204 ஆகிய ரக விதை நெல் வரவழைக்கப்பட்டுள்ளது.விதை நெல் விவசாயிகளுக்கு வழங்கும் நிகழ்ச்சி சங்க அலுவலகத்தில் நடந்தது. சங்க செயலாளர் இந்திராணி தலைமை வகித்தார். சங்க தலைவர் காளியப்பன், விதை நெல் வினியோகத்தை துவக்கி வைத்து கூறியதாவது:தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் தண்ணீர் திறக்கப்பட்டதை தொடர்ந்து, விவசாயிகள் பயன்பெறும் வகையில் தரமான விதை நெல் வினியோகம் செய்யப்படுகிறது. ஏ.எஸ்.டி., 16 ரக விதை நெல், 50 டன், ஏ.டி.டி., 45 ரக விதை

நெல், 25 டன், ஏ.டி.டி., 39 ரக விதை நெல், 10 டன், பி.பி.டி.,5204 ரக விதை நெல் (ஆந்திர சன்ன ரக பொன்னி), 50 என மொத்தம், 135 டன் விதை நெல் தயார் நிலையில் உள்ளது. ஏ.எஸ்.டி., ரக விதை நெல் ஒரு கிலோ, 37 ரூபாய்க்கும், ஏ.டி.டி., 45 மற்றும் ஏ.டி.டி., 39 ரக விதை நெல் ஒரு கிலோ, 35 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.இங்குள்ள தரமான விதை நெல்லை விவசாயிகள் வாங்கி, பயன்பெற வேண்டும், என அவர் தெரிவித்தார்.

### காட்டு நெல்லி விளைச்சல் ஜோர்: தாளவாடி விவசாயிகள் மகிழ்ச்சி

ஈரோடு: ஈரோடு மாவட்டம் தாளவாடியில் காட்டுநெல்லி எனும் மரநெல்லியின் வளர்ச்சி ஜோராக இருப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் சில ஆண்டாக பருவமழை பொய்த்ததால், விவசாய நிலங்கள் யாவும் வறண்டு காணப்படுகிறது. மலைப்பகுதியான ஆசனூர், தாளவாடியிலும் போதிய மழை இன்றி, வனப்பகுதிகள் காய்ந்தது.தற்போது, ஆசனூர், தாளவாடி மலைப்பகுதிகளில் சாரல் மழை தொடர்ந்து பெய்வதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். இந்நிலையில், தாளவாடியில் காட்டுநெல்லியின் விளைச்சல் ஜோராக இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.இதுகுறித்து விவசாயி முத்துச்சாமி கூறியதாவது: கடந்த ஆண்டு தாளவாடியில் கடும் வெயில் நிலவியதால், கள்ளிப்பூச்சியின் தாக்குதலால், நெல்லி மரங்கள் பாதிக்கப்பட்டது. ஆனால், சில வாரமாக ஆசனூர், தாளவாடி மலைப்பகுதிகளில் சாரல் மழை தொடர்ந்து பெய்து வருவதால், குளிரும், வெயிலும் கலந்த சீதோஷ்ண நிலவி வருகிறது. எனது தோட்டத்தில், 2,000 காட்டு நெல்லி எனப்படும் மரநெல்லி மரங்கள் வளர்த்து வருகிறேன்.கள்ளிப்பூச்சியின் தாக்குதலில் இருந்து மரங்களை காக்க, குளோரிபைபாஸ் என்ற மருந்தினை தெளிப்பதால், அதன் தாக்குதல் குறைந்துள்ளது.கடந்த ஆண்டு கிலோ, 20 ரூபாய்க்கு விற்ற காட்டுநெல்லி, தற்போது கிலோ, 18 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கடந்த ஆண்டை விட, இந்தாண்டு விளைச்சல் ஜோராக உள்ளது.சாரல் மழையோடு சேர்ந்த காற்றும், பனியும் அடிக்கடி வீசுவதால், நன்கு வளர்ச்சி அடைந்த நெல்லியின் மரக்கிளைகள், பாரம் தாங்காமல் உடைகிறது. கேரளாவில், தமிழக காட்டு

நெல்லிக்கு நல்ல வரவேற்பு இருப்பதால், தாளவாடியில் இருந்து, நெல்லிக்காய் ஏற்றுமதி செய்யப்படுகிறது, என்றார்.

### மேட்டூர் அணை நீர் கரூர் வந்தது

வேலாயுதம்பாளையம்: மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர், நேற்று முன்தினம் கரூர் மாவட்டத்துக்கு வந்து சேர்ந்தது.கர்நாடகா அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படாததால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்தது. இதனால், கடந்த ஜூன் 12ம் தேதி, டெல்டா பாசன பகுதிகளுக்கு குறுவை சாகுபடிக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை.இந்நிலையில், கர்நாடகா மாநிலத்தில் உள்ள காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில், கடந்த மாதம் இரண்டாவது வாரத்தில் இருந்து மழை பெய்ய துவங்கியது. இதனால், கபிணி அணைக்கு அதிகளவில் தண்ணீர் வந்தது.இதையொட்டி, பாதுகாப்பு கருதி கபிணி அணையில் இருந்து விநாடிக்கு 35 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் கடந்த வாரம் ஒரே நாளில் 10 அடி அதிகரித்தது.மேட்டூர் அணையில் இருந்து கடந்த சில நாட்களுக்கு முன் காவிரியாற்றில் குடிநீருக்காக ஆயிரம் கன அடி திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் நேற்று முன் தினம் கரூர் மாவட்டம் வேலாயுதம்பாளையம் பகுதிக்கு வந்தது சேர்ந்தது.கடந்த சில மாதங்களாக வறண்டு பாலைவனம் போல் காணப்பட்ட காவிரியாற்றில், தண்ணீர் செல்வதை, வேலாயுதம்பாளையம் காவிரியாற்று பாலத்தில் இருந்து ஏராளமான பொதுமக்கள் வேடிக்கை பார்த்தப்படி சென்றனர்.

### நாட்டின் காபி ஏற்றுமதி1.91 லட்சம் டன்னாக குறைந்தது

புதுடில்லி:நடப்பு 2013ம் ஆண்டின், முதல் ஆறு மாத (ஜன.,-ஜூன்) காலத்தில், நாட்டின் காபி ஏற்றுமதி, 1,91,055 டன்னாக சரிவடைந்துள்ளது. இது, கடந்தாண்டின் இதே காலத்தில், 1,99,969 டன்னாக அதிகரித்து காணப்பட்டது.ஆக, மதிப்பீட்டு காலத்தில், காபி ஏற்றுமதி, 4.45 சதவீதம் சரிவடைந்துள்ளது என, காபி வாரியம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேசில், வியட்நாம், இந்தோனேஷியா உள்ளிட்ட நாடுகளில் காபி உற்பத்தி மிகவும் அதிகரித்துள்ளது. இதனால், சர்வதேச சந்தையில், இதன் விலை குறைந்து காணப் படுகிறது. இதன் காரணமாகவே, நாட்டின் காபி ஏற்றுமதி சரிவடைந்துள்ளது என, காபி வாரியத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். மதிப்பீட்டு காலத்தில், மதிப்பின் அடிப்படையில், நாட்டின் காபி ஏற்றுமதி, 2,818 கோடி ரூபாயாக குறைந்துள்ளது. இது, கடந்தாண்டின் இதே ஆறு மாத காலத்தில், 2,955 கோடி ரூபாயாக உயர்ந்து காணப்பட்டது.நாட்டின் மொத்த காபி ஏற்றுமதியில், ரோபஸ்டா வகை காபி ஏற்றுமதி, 7 சதவீதம் குறைந்து, 1,10,983 டன்னிலிருந்து, 1,03,296 டன்னாக சரிவடைந்து உள்ளது.

இதே போன்று, அராபிகா வகை காபி ஏற்றுமதியும், 4 சதவீதம் சரிவடைந்து, 41,026 டன்னிலிருந்து, 39,367 டன்னாக குறைந்துள்ளது.மேலும், "இன்ஸ்டன்ட்' காபி ஏற்றுமதியும், 32 சதவீதம் வீழ்ச்சி கண்டு, 17,826 டன்னிலிருந்து, 12,153 டன்னாக சரிவடைந்துள்ளது. இந்தியாவிலிருந்து, இத்தாலி, ஜெர்மனி மற்றும் ரஷ்ய கூட்டமைப்பு நாடுகளுக்கு அதிகளவில் காபி ஏற்றுமதி செய்யப்படுகிறது. நடப்பு 2012-13ம் பருவத்தில் (அக்.,-செப்.,), நாட்டின் காபி உற்பத்தி, 3,15,500 டன்னாக அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இது, கடந்த 2011-12ம் பருவத்தில் மேற் கொள்ளப்பட்ட உற்பத்தியை (3,14,000 டன்) விட, 1,500 டன் அதிகமாகும் என, காபி வாரியம் மேலும் தெரிவித்துள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**04.07.2013**

**ரூ.1.25 லட்சம் கோடி செலவில் ஏழைகளுக்கு மலிவு விலையில் தலா 5 கிலோ அரிசி**



புதுடெல்லி : உணவு பாதுகாப்பு அவசர சட்டத்துக்கு மத்திய அமைச்சரவை நேற்று ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி ஏழைகள் ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் தலா 5 கிலோ அரிசி மலிவு விலையில் வழங்கப்படும். ஏழைகளுக்கு உணவு தானியங்களை மலிவு விலையில் வழங்கும் உணவு பாதுகாப்பு திட்டத்தை அமல்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான மசோதாவை கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே நிறைவேற்ற மத்திய அரசு முயற்சி செய்தது. ஆனால், தொடர் அமளி காரணமாக மசோதாவை நிறைவேற்ற முடியவில்லை. இதனால், நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் நடத்தி மசோதாவை நிறைவேற்ற அரசு மேற்கொண்ட முயற்சியும் தோல்வியில் முடிந்தது.

இதைதொடர்ந்து உணவு பாதுகாப்பு அவசர சட்டம் கொண்டு வர அரசு முடிவு செய்தது. அவசர சட்டத்துக்கு, டெல்லியில் நேற்று நடந்த மத்திய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதன்படி, ஏழைகளுக்கு தலா 5 கிலோ

உணவு தானியம் மலிவு விலையில் வழங்கப்படும். ஒரு கிலோ அரிசி ரூ.3க்கும், கோதுமை கிலோ ரூ.2க்கும் மற்ற உணவு தானியங்கள் கிலோ ரூ.1,க்கும் வழங்கப்படும். நாட்டின் மக்கள் தொகையில் 67 சதவீதம் பேர் இந்த திட்டத்தால் பயனடைவார்கள். அந்தியோதயா அன்ன யோஜனா திட்ட பயனாளி குடும்பங்களுக்கு தலா 35 கிலோ உணவு தானியம் வழங்கப்படும். இதற்கு அரசு ரூ.1.25 லட்சம் கோடி செலவிடும்.

**விவசாயிகள் ஏமாற்றம் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது**



மேட்டூர் : கர்நாடகாவில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து பெய்த மழையால் அங்குள்ள அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. கபினி, கிருஷ்ணராஜசாகர் உள்ளிட்ட அணைகள் நிரம்பும் நிலையில் இருப்பதால் உபரிநீர் காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டது. இதனால் ஒரு வாரமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 38,547 கனஅடி வரை உயர்ந்தது. இதனால் மேட்டூர் அணையின் நீர் மட்டம் வேகமாக உயர தொடங்கியது.

தற்போது கர்நாடகாவில் மழை குறைந்து விட்டதால் கபினி அணையில் இருந்து காவிரியில் திறக்கப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. இதனால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சரிந்துள்ளது. நேற்று காலை அணையின் நீர்மட்டம் 45.88 அடியாக இருந்தது. கடந்த 24 மணி நேரத்தில் நீர் மட்டம் 1.10 அடி உயர்ந்துள்ளது. நீர்வரத்து நேற்று முன்தினத்தைவிட நேற்று விநாடிக்கு 10 ஆயிரம் கனஅடி குறைந்துள்ளது. நேற்று முன்தினம் காலை விநாடிக்கு 18,327 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை விநாடிக்கு 8,466 கனஅடியாக சரிந்தது. குடிநீர்

தேவைக்காக அணையிலிருந்து விநாடிக்கு 1001 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. நீர் இருப்பு 15.31 டிஎம்சி. நீர்வரத்து மேலும் சரியும் நிலை உள்ளதால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

**இதென்ன நிர்வாகம்**

ஏழைகளுக்கு மலிவு விலையில் அரிசி, கோதுமை வழங்க வழி செய்யும் உணவு பாதுகாப்பு திட்டத்துக்காக அவசர சட்டம் பிறப்பிக்க மத்திய அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இந்த தகவல் வெளியாகும் அதே நேரத்தில், 'நுகர்பொருள் கிடங்குகளில் இடம் இல்லாததால் 375 டன் அரிசி லாரிகளில் தேக்கம்' என்ற செய்தி  தமிழ் முரசு இதழில் வெளியாகியிருக்கிறது.

முரண்பாடுகளின் மொத்த உருவமாக ஒரு நாட்டை குறிப்பிடுவதாக இருந்தால் இந்தியாவைவிட பொருத்தமாக எதுவும் தேறாது. ஆண்டுக்கு 50,000 கோடி உணவு தானியங்கள் வீணாகிப் போவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. சேமிப்பு கிடங்குகள் போதாது என்று காரணம் சொல்லப்படுகிறது. அது உண்மையல்ல. உணவு தானிய உற்பத்தி, கொள்முதல், சேமிப்பு, விடுவிப்பு, வினியோகம் ஆகியவை ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் நிர்வகிக்கப்படுகிறது.

தஞ்சாவூர் செய்தியை எடுத்துக் கொண்டால் இந்த சீசனில் கொள்முதல் செய்த நெல் 2.28 லட்சம் டன். முழுவதும் மில்களுக்கு அனுப்பப்பட்டு அரிசியாக லாரிகளில் திரும்பி வந்துள்ளது. ரேஷன் கடைகளுக்காக மத்திய அரசு அனுப்பிய அரிசி அங்குள்ள சேமிப்பு கிடங்குகளில் வைக்கப்பட்டுள்ளதால் புது அரிசிக்கு இடமில்லை. உடனே அந்த லாரிகளை சுற்று வட்டார ஊர்களில் உள்ள கிடங்குகளுக்கு அனுப்பி இருக்கலாம். பல ஆயிரம் டன் சேமிக்க அவற்றில் இடமிருக்கிறது. மாவட்ட நிர்வாகம் அந்த முடிவை எடுக்காததால் 375 டன் அரிசியுடன் லாரிகள் ஒரு வாரமாக சும்மா நிற்கின்றன.
கிடங்கிலிருந்து மூட்டைகள் வெளியேறும்போது ஏற்படும் காலியிடத்தில் இறக்கி வைப்பார்களாம். பாவம், டிரைவர்கள் அதுவரை கீழே இறங்க முடியாது. திடீரென

மழை கொட்டினால் எல்லாம் பாழாகிவிடும். ஏற்கனவே ரேஷன் கடை அரிசிக்கு ரொம்ப நல்ல பெயர். வீணாகும் தானியங்களை ஏழைகளுக்கு இலவசமாக கொடுக்க வேண்டியதுதானே என்று உச்ச நீதிமன்றம் ஒருமுறை கோபமாக கேட்டபோது, அது அரசின் கொள்கைக்கு விரோதமானது; நடைமுறையில் சரியாக வராது என்று அரசு பதிலளித்தது.

தேசிய வருமானத்தில் 15 சதவீதத்துக்கும் குறைவாக ஈட்டும் வேளாண்மையை நம்பி 60 சதவீதம் மக்கள் வாழும் நாட்டில் இவ்வளவு அலட்சியமாக நிர்வாகம் நடந்தால் விவசாயிகள் நிரந்தரமாக ஏழ்மையில் வாடுவதை தவிர வழியென்ன?

**வரத்து அதிகரிப்பால் பீட்ரூட் விலை சரிவு விவசாயிகள் கவலை**

சின்னமனூர்: சின்னமனூர் ஏலச்சந்தையில் வரத்து அதிகரிப்பால் பீட்ரூட் விலை சரிந்துள்ளது. சின்னமனூர் மற்றும் அதனை சுற்றியுள்ள சங்கராபுரம், திம்மிநாயக்கன்பட்டி, தருமத்துப்பட்டி, அய்யம்பட்டி, அம்மாபட்டி, அப்பிபட்டி, முத்துலாபுரம் உள்ளிட்ட கிராமங்களில் 70 நாள் பயிரான பீட்ரூட் நூற்றுக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்தது. விதை, மருந்து, உரம், களையெடுப்பு என ஏக்கருக்க விவசாயிகள் ரூ.30 ஆயிரம் வரை செலவு செய்தனர். பீட்ரூட் விளைச்சலும் அமோகமாக இருந்தது. கடந்த மாதம் வரை காய்கறிகள் விலை கடுமையாக உயர்ந்தது. பீட்ரூட் கிலோ ரூ.40 வரை விற்கப்பட்டது. இதனால், விவசாயிகள் உற்சாகம் அடைந்தனர்.சின்னமனூர் பகுதியில் ஏக்கருக்கு 90 மூடை முதல் 100 மூடை வரை விளைச்சல் இருந்தது. இந்நிலையில் கடந்த ஜூன் முதல் வாரத்தில் இருந்து தேனி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. இதனால், சின்னமனூர் ஏலச்சந்தைக்கு பீட்ரூட் வரத்து அதிகரித்தது. தற்போது கிலோ ரூ.10க்கு விற்கப்படுகிறது. தொடர்ந்து வரத்து அதிகரித்து வருவதால் விலை மேலும் சரியும் என்பதால் சின்னமனூர் ஏலச்சந்தையிலிருந்து மதுரை, திண்டுக்கல், திருச்சி, நெல்லை உள்ளிட்ட இடங்களுக்கு அனுப்பும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

## வேளாண்துறை சார்பாக பாரம்பரிய பொருட்கள் விழிப்புணர்வு ஒலித்தகடு வெளியீடு

நாகர்கோவில்: குமரி மாவட்ட வேளாண்துறை சார்பாக பாரம்பரிய பொருட்கள் விழிப்புணர்வு குறித்த பாடல்கள் அடங்கிய ஒலித்தகட்டினை மாநில வேளாண்மை இயக்குநர் ராஜேந்திரன் வெளியிட்டார். பாரம்பரிய பொருட்களான கம்பு, ராகி, சோளம், தினை, சாமை, பயறு வகைகள் போன்றவற்றின் பயன்பாட்டினையும், அப்பயிர்களை அதிகமான நிலங்களில் விளைவித்து வேளாண்துறையில் 2ம் பசுமை புரட்சியை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு கருத்தரங்கு சென்னையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நாகர்கோவிலை சேர்ந்த பழனியாபிள்ளை, இளநீரின் முக்கியத்துவம், விதைகள் தேர்வு, பண்ணைக்குட்டை அமைத்தல் போன்றவை பற்றி எழுதி பாடியிருந்த ஒலித்தகடை மாநில வேளாண்மை இயக்குநர் ராஜேந்திரன் வெளியிட்டார். குமரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மீரான்ஜி முன்னிலை வகித்தார். இந்த ஒலித்தகட்டில் பின்னணி பாடகர்கள் ராஜ்குமார், ஜெயா ரமேஷ் ஆகியோரும் பாடியிருந்தனர். தென்னை என் அன்னை என்ற கவிதை நூலும் இந்நிகழ்ச்சியில் வெளியிடப்பட்டது.

## கூடுதல் லாபம் பெற பாசிப்பயிரில் புதிய ரகங்கள் சாகுபடி செய்ய வேண்டும் உதவி இயக்குனர் தகவல்

சேலம், : சேலம் மாவட்டத்தில் பாசிப்பயிரில் கூடுதல் மகசூல் மற்றும் லாபம் பெற புதிய ரகங்களை சாகுபடி செய்ய வேண்டும். இதுகுறித்து சேலம் விதைச்சான்று உதவி இயக்குனர் ராஜதுரை வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: தற்சமயம் பெய்து வரும் கோடை மழையை பயன்படுத்தி உளுந்து, பாசிப்பயிறு மற்றும் தட்டை பயிறு சாகுபடி செய்து அதிக மகசூல் பெற வேண்டும். கேஎம்& 2, வம்பன்& 2 மற்றும் சிஒ& 6 என்ற புதிய ரகங்களை சாகுபடி செய்ய வேண்டும். இதன் மூலம் கூடுதல் லாபமும், மகசூலும் பெற முடியும். கேஎம்& 2, வம்பன்& 2 மற்றும் சிஒ& 6 ரகங்கள் சான்று விதை உற்பத்தி செய்ய ஏற்றதாக உள்ளது. முதலில் விதைப்பண்ணை பதிவு செய்ய வேண்டும். உரிய

படிவத்தில் மூன்று நகல்களில் விதைப்பு அறிக்கை பூர்த்தி செய்து விதைப்பண்ணை கட்டணம் செலுத்த வேண்டும். ஏக்கருக்கு வயலாய்வுக் கட்டணம் ரூ.50, பதிவுக்கட்டணம் ரூ.25 மற்றும் விதை பரிசோதனை கட்டணம் ரூ.30 செலுத்தி விதைச்சான்று உதவி இயக்குனர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு ராஜதுரை தெரிவித்துள்ளார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**04.07.2013**

**அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மீண்டும் மழை: முல்லைப்பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

கூடலூர்,

அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மீண்டும் மழை பெய்ய தொடங்கி உள்ளதால் முல்லைப் பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

முல்லைப்பெரியாறு அணை

தேனி மாவட்டத்தில் கம்பம் பள்ளத்தாக்கு பாசன பகுதி யின் நீர் ஆதாரமாக முல்லைப் பெரியாறு அணை திகழ்கிறது. இந்த அணையில் இருந்து ஆண்டுதோறும் ஜூன் மாதம் முதல் தேதி பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படும். இந்த ஆண்டு அணை நீர்மட்டம் குறைவாக காணப்பட்டதால் கடந்த வாரம் தான் அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

அதே நேரத்தில் ஜூன் மாதம் தொடக்கத்தில் தென் மேற்கு பருவமழை தீவிரமாக பெய்ததால் இந்த அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 5 ஆயிரம் கன அடி வரை உயர்ந்தது. இதனை அடுத்து அணை நீர்மட்டம் கிடு,கிடு வென உயர்ந்தது. கடந்த 28-ந் தேதி அணை நீர்மட்டம் 124.70 அடியாக காணப் பட்டது. அப்போது, அணை யில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. அதன்பிறகு அணை நீர்ப் பிடிப்பு பகுதி களில் மழை குறைந்ததால் அணைக்கு நீர் வரத்து வினாடிக்கு 217 கனஅடியாக நேற்று முன்தினம் குறைந்து காணப்பட்டது.

அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

இதனிடையே நேற்று முன் தினம் பகலில் இருந்து அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தென் மேற்கு பருவமழை சாரலாக மீண்டும் பெய்து வருகிறது. இதன்காரணமாக அணைக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. நேற்று காலை நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 1,131 கன அடி நீர்வரத்து காணப் பட்டது. அணையில் இருந்து வினாடிக்கு 1,372 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணையில் 3,440 மில்லியன் கனஅடி நீர் இருப்பு உள்ளது. அணையின் நேற்றைய நீர் மட்டம் 124,10 அடியாக இருந்தது.

அதே நேரத்தில் நேற்று முன்தினம் காலை முதல் நேற்று காலை வரை அணைப் பகுதியில் 32.4 மில்லிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. தேக் கடி பகுதியில் 14.6 மில்லிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. மேலும் தேனி மாவட்டத்தில் கூடலூர், போடி போன்ற ஒரு சில பகுதிகளில் நேற்று சாரல் மழை பெய்தது குறிப்பிடத் தக்கது.

வைகை அணை

தேனி மாவட்டத்தில் உள்ள வைகை அணை நீர்மட்டம் நேற்று காலையில் 40.42 அடி யாக உயர்ந்துள்ளது. (உச்ச நீர் மட்டம் 71 அடி) முல்லைப் பெரியாற்றில் திறக் கப் பட்ட தண்ணீர் வரத்து வைகை அணைக்கு காணப் படுவதால் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 853 கன அடியாக காணப்படுகிறது. அணையில் இருந்து மதுரை நகர குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 60 கன அடிநீர் திறந்து விடப் படுகிறது. அணையில் மொத் தம் 1,049 மில்லியன் கன அடிநீர் இருப்பு உள்ளது.

மழையளவு

தேனி மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை முதல் நேற்று காலை வரை பெய்த மழையளவு விவரம் (மில்லிமீட்டரில்) வருமாறு:-

கூடலூர்-2, சண்முகாநதி அணை- 3, உத்தமபாளையம்-1, வீரபாண்டி-1.

**தென்மேற்கு பருவமழை தீவிரம்: ஊட்டியில் மழையுடன், காற்று வீசுவதால் கடுங்குளிர் சுற்றுலா பயணிகள் அவதி**

ஊட்டி,

ஊட்டியில் சாரல் மழை யுடன் பலத்தகாற்றுவீசுவ தால் கடுங்குளிர் நிலவு கிறது. இதனால் சுற்றுலா பயணிகள் அவதி அடைந்து உள்ளனர்.

தென்மேற்கு பருமழை தீவிரம்

நீலகிரி மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதம் முதல் தென்மேற்கு பருவமழை தீவிர மாக பெய்து வருகிறது. இந்த மழை காரணமாக கூடலூர், பந்தலூர் பகுதியில் மண் சரிவுகள் அதிகளவு ஏற்பட் டது. இதையடுத்து, ஆபத்தான இடங்களில் இருந்த பொது மக்கள் அப்புறபடுத்தப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப் பட்டு இருந்தனர்.

தென்மேற்கு பருவ மழையின் காரணமாக மாவட் டத்தில் உள்ள நீர்நிலைகள், அணைகளில் தண்ணீர் மட் டம் அதிகரித்தது. மழை யால் விவசாயிகள் பெரிதும்மகிழ்ச்சி அடைந்தனர். இந்த நிலையில் கடந்த 2 தினங்களாக ஊட்டி யில் வெயில் அடித்தது. ஆனால் நேற்று முன்தினம் முதல் நீலகிரி மாவட்டத்தில் மீண்டும் பருவமழை தீவிரம் அடைந்து உள்ளது.

கடுங்குளிர்

ஊட்டியில் நேற்று காலை முதல் சாரல் மழை பெய்தது. மேலும் பலத்த காற்று வீசிய தால் கடுங்குளிர் நிலவியது. இதன் காரணமாக சுற்றுலா பயணிகள் பெரிதும் அவதி அடைந்தனர். மேலும் ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா, படகு இல்லம், தொட்பெட்டா உள்ளிட்ட இடங்களில் சுற் றுலா பயணிகள் கூட்டம் குறைவாக காணப்பட்டது.கடுங்குளிரை தாங்க முடியா மல் சுற்றுலா பயணிகள் கம் பளி ஆடைகளை அணிந்து சுற்றுலா தலங்களில் வலம் வந்தனர்.

சில சுற்றுலா பயணிகள் துண்டுகளை கொண்டு தலையை மூடியபடி வலம் வந்தனர். விவசாய தொழிலா ளர்கள், ஆட்டோ டிரைவர்கள் மாலை நேரத்தில் நெருப்பு மூட்டி குளிர் காய்ந்தனர்.

பள்ளி மாணவ- மாணவிகள் அவதி

காலை மற்றும் மாலை நேரங்களில் கடுங்குளிருடன் மழை பெய்வதால் பள்ளி மாணவ-மாணவிகள் பெரி தும் அவதி அடைந்து உள்ள னர். கடுங்குளிரையும் பொருட் படுத்தாமல் மாணவர்கள் காலையில் எழுந்து கம்பளி ஆடைகளை அணிந்து பள்ளி களுக்கு சென்று வருகின்ற னர்.
ஊட்டியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணைகளின் நீர்மட்டம் வெகுவாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் மழையுடன் கடுங் குளிர் நிலவுவதால் வரும் நாட்களில் நீலகிரி மாவட்டத் திற்கு வரும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை வெகுவாக குறையும் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

**கச்சா எண்ணெய் விலை உயர்வு, சர்வதேச நிலவரங்களால் ‘சென்செக்ஸ்’ 286 புள்ளிகள் வீழ்ச்சி**

மும்பை


கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பு மற்றும் சர்வதேச நிலவரங்களால் புதன்கிழமையன்று பங்கு வியாபாரம் சரிவைச் சந்தித்தது. மும்பை பங்குச் சந்தையின் குறியீட்டு எண் ‘சென்செக்ஸ்’ 286 புள்ளிகளை இழந்தது. முதலீட்டாளர் பங்குகளின் சந்தை மதிப்பு ரூ.1.10 லட்சம் கோடி குறைந்தது.

**<u>பணக்கொள்கை</u>**

சர்வதேச சந்தைகளில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ள நிலையில், ரூபாயின் வெளிமதிப்பும் சரிவடைந்துள்ளது. இதன் காரணமாக நடப்பு கணக்கு பற்றாக்குறை அதிகரிக்கும். எனவே, பாரத ரிசர்வ் வங்கி இம்மாதம் 30–ந் தேதி

வெளியிடும் பணக் கொள்கை ஆய்வு அறிக்கையில் முக்கிய கடன்களுக்கான வட்டியை குறைக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஜூன் மாதத்தில் சேவைத் துறையின் வளர்ச்சி குறைந்துள்ளதாக எச்.எஸ்.பீ.சி. நிறுவன ஆய்வில் தெரிய வந்துள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியை கணக்கிடுவதில் இத்துறையின் பங்கு 55 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது. பொதுத்துறை வங்கிகளின் வாராக்கடனும் உயர்ந்துள்ளது. ஜூன் மாதத்தில் அன்னிய நிதி நிறுவனங்கள் ரூ.9,820 கோடி நிகர மதிப்பிற்கு பங்குகளை விற்பனை செய்துள்ளன.



சீனாவின் பொருளாதார வளர்ச்சி குறையும் என்ற செய்தியால் ஐரோப்பா மற்றும் இதர ஆசிய பங்குச் சந்தைகளில் வர்த்தகம் மந்தமாக இருந்தது.

**13 துறைகளில்...**

இதுபோன்ற காரணங்களால் மொத்தமுள்ள 13 துறைகளில் நுகர்பொருள், மருந்து நீங்கலாக 11 துறைகளைச் சேர்ந்த பல நிறுவனங்களின் பங்கு விலை குறைந்தது. குறிப்பாக, ரியல் எஸ்டேட், உலோகம், எண்ணெய் மற்றும் எரிவாயு, மின்சாரம் ஆகிய துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களின் பங்குகள் பலத்த அடி வாங்கின.

‘சென்செக்ஸ்’ கணக்கிட உதவும் 30 நிறுவனங்களுள் டாட்டா பவர், ஸ்டெர்லைட் இண்டஸ்ட்ரீஸ், டாட்டா ஸ்டீல், ஹிண்டால்கோ, ஓ.என்.ஜி.சி., பார்தி ஏர்டெல், விப்ரோ உள்ளிட்ட 27 நிறுவனங்களின் பங்கு விலை குறைந்தது.

வர்த்தகம் முடியும்போது ‘சென்செக்ஸ்’ 286.06 புள்ளிகள் வீழ்ச்சி கண்டு 19,177.76 புள்ளிகளில் நிலை கொண்டது. வர்த்தகத்தின் இடையே அதிகபட்சமாக 19,347.11 புள்ளிகள் வரையிலும், குறைந்தபட்சமாக 19,147.31 புள்ளிகள் வரையிலும் சென்றது.

<u>**நிப்டி**</u>

தேசிய பங்குச் சந்தையின் குறியீட்டு எண் ‘நிஃப்டி’ 86.65 புள்ளிகள் சரிந்து 5,770.90 புள்ளிகளில் நிலைபெற்றது. வர்த்தகத்தின் இடையே அதிகபட்சமாக 5,815 புள்ளிகளுக்கும், குறைந்தபட்சமாக 5,760.40 புள்ளிகளுக்கும் சென்றது.

## எகிப்தில் நடைபெறும் போராட்டத்தால் 14 மாதங்களில் இல்லாத அளவிற்கு கச்சா எண்ணெய் விலை அதிகரித்தது

எகிப்து நாட்டில் நடைபெறும் போராட்டத்தால் புதன்கிழமை அன்று 14 மாதங்களில் இல்லாத அளவிற்கு கச்சா எண்ணெய் விலை அதிகரித்தது.

<u>**நியூயார்க் சந்தையில்...**</u>

நியூயார்க் முன்பேர வர்த்தக சந்தையில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை ஒரே நாளில் 2.07 டாலர் அதிகரித்து 101.65 டாலராக உயர்ந்தது. 2012 மே மாதத்திற்கு பிறகு தற்போதுதான் இந்த அளவிற்கு விலை உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. லண்டன் வர்த்தக சந்தையில் பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை 94 சென்ட் அதிகரித்து 104.94 டாலராக உயர்ந்தது.

எகிப்து நாட்டில் அதிபர் முகமது முர்சி பதவி விலக கோரி நடைபெறும் போராட்டம் வலுத்து வருகிறது. இந்த நாடு கச்சா எண்ணெயை உற்பத்தி

செய்யவில்லை. அதேசமயம், செங்கடலுடன் மத்திய தரைக்கடலை இணைக்கும் சூயஸ்கால்வாய் இந்நாட்டின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. இதன் வாயிலாகத்தான் அதிக அளவில் கச்சா எண்ணெய் எடுத்துச் செல்லப்படுகிறது. எனவே, எகிப்தில் நடைபெறும் போராட்டத்தால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் சப்ளை பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

உலக அளவில் கச்சா எண்ணெய் பயன்பாட்டில் முதலிடத்தில் உள்ள அமெரிக்காவின் பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படத் தொடங்கி உள்ளது. இதனால் கச்சா எண்ணெய் விற்பனை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இந்தியா தனது கச்சா எண்ணெய் தேவைப்பாட்டில் சுமார் 80 சதவீதத்தை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. எனவே, எண்ணெய் விலை அதிகரிப்பதால் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களின் வருவாய் இழப்பு அதிகரித்து மத்திய அரசின் மானியச் சுமை உயரும்.



சென்ற நிதி ஆண்டின் மூன்றாவது காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நடப்பு கணக்கு பற்றாக்குறை எப்போதும் இல்லாத அளவிற்கு 6.7 சதவீதமாக உயர்ந்து இருந்தது. இந்த பற்றாக்குறை அதிகரிப்பிற்கு கச்சா எண்ணெய் மற்றும் தங்கம் இறக்குமதியே முக்கிய காரணமாகும்.

**<u>தங்கம் இறக்குமதி</u>**

எனவே, தங்கம் இறக்குமதியை கட்டுப்படுத்தும் வகையில் மத்திய அரசும், ரிசர்வ் வங்கியும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. இதன் காரணமாக, ஜூன் மாதத்தில் தங்கம் இறக்குமதி 35–40 டன்னாக குறைந்து இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, மே மாதத்தில் 162 டன்னாக மிகவும் உயர்ந்து இருந்தது.

சென்ற நிதி ஆண்டின் நான்காவது காலாண்டில் நடப்பு கணக்கு பற்றாக்குறை 3.6 சதவீதமாக குறைந்துள்ளது. தற்போது கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ள நிலையில், ரூபாய் மதிப்பும் சரிந்துள்ளது. இதன் காரணமாக இறக்குமதி செலவினம் அதிகரித்து, நடப்பு கணக்கு பற்றாக்குறை உயரும்.